# ஞானபோதினி.

ஸம்புடம். IV. } 1901ஹூ ஜனவரிமீ 20உ { புத்தகம். 6.

## புது நூற்றூண்டு.

சென்ற டிசம்பர்மூ 31-ஆந் தேதியோடு 1900-ஆம் வருஷமும் 19-ஆம் நூற்றூண்டும் ஒருங்கே கழிந்தன. நிகழும் ஜனவரிமீ 1உயில் 1901-ஆம் வருஷமும் 20-ஆம் நூற்றூண்டும் ஒருங்கே பிறந்தன. கடந்த நூற்றூண்டில் நிகழ்ந்த விஷயங்களனைத்தும் யாவரும் உணர்ந்தனவே. உலகந்தான் தொடங்கியதுமுதல் நேரிய வழியிற் புகுந்து உயர்நிலையை நோக்கியே சென்று கொண்டிருக்கின்றது.

மனிதனுக்குத் தடைகளாயிருந்த ஐம்பெரும் பூதங்களும் இப்பொழுது அவனுக்குப்பேருதவி புரிவனவாயின. புதிய புதிய இயந்திரங்கள் நாடோறும் கண்டுபிடிக்கப்படுகின்றன. அவைகள் உலகிற்குப் பெரும் பயன் விளையத்தக்கவாறு பயன் படுத்தவும் படுகின்றன. துரைத்தனத்தார்க்கும் குடிகட்கு முள்ள வேறுபாடுகள் சிறிதுசிறிதா யொழிந்து கொண்டிருக்கின்றன. ஒருவரையொருவர் உள்ளவாறே உணர்ந்து அவ்வவர் மனக்கோளுக்கேற்றபடி பொதுநன்மை நாடி நடக்கத் தலைப்படுகின்றனர். துரைத்தனத்தாரைக் கண்டு அஞ்சியொழுகும் இயல்புபோய் அவர்களிடத்து அன்புகொள்ளும் இயல்பு உதித்தோங்குகின்றது. கைத்தொழிற் சாலைகளும் பொறித்தொழிற் சாலைகளும் புதிய புதிய இருப்புப் பாதைகளும் இவைபோல்வன பிறவும் ஆங்காங்கு ஏற்படுத்தப்பட்டு நாட்டிற்கு நன்மை புரியா நின்றன. பல ஆங்கிலமுறைகளும் கல்வி தொழில் முதலிய விஷயங்களில் அநுசரிக்கப் பட்டுவருகின்றன. மேற்புலவாணரது கலைபயிற்றுமுறைகளைத்

தழுவியே மாணுக்கருக்குத் தாம் மேற்கொள்ளும் கல்வியில் ஆர்வம் பிறக்குமாறு இனியவழியிற் கல்வி கற்பிக்கப் படுகின்றது. கட்டிடங்களும் தெருக்களும் தற்கால சுகாதார விதிகளுக் கிணங்கக் கட்டப்பட்டும் ஒழுங்கு படுத்தப்பட்டும் வருகின்றன. மிருகங்களையும் மனிதர்களையும் பெரிதும் வருத்திச் செய்யப்படும் வேலைகளுட் பல இயந்திரங்களாற் செய்யப்படுதலிற் பொதுப்பட நாட்டின்கட் கருணைத்திறம் மிகுந்து வருகின்றது. சனசமூகச் சீர்திருத்தங்களும் அறிவுடையோர் மகிழத்தக்க வழியிற் செய்யப்படுகின்றன. பயனின்றியும் பொருளின்றியும் இருந்த போலி ஆசாரங்களுள் அநேகம் சழிவனவாயின. பெண்கல்வி மிகுதியும் பாராட்டப்படுகின்றது. பாலிய விவாகம் அதிகமாய் நிகழ்கின்றில. புனர்விவாகமும் ஆங்காங்கு நடக்கின்றன. நெடுந்தூரங் கடற்பிரயாணம் செய்துவந்தவர்கள் சாதியுட் சேர்த்துக்கொள்ளப் படுகின்றனர். நீதிமார்க்கமும் நியாயவழிகளும் குறுகிக்கிடத்தலின்றிப் பரந்து விசாலித்து யாவரும் இடுக்கணின்றிச்செல்லத்தக்கவாறு அமைந்திருக்கின்றன. நீயர் தொகையும் சுருங்கிக்கொண்டு வருகின்றது. சுதேசாபிமானமும் சுபாஷாபிமானமும் மிகுந்து வருகின்றன. ஆங்கில நூற்பயிற்சி மிக்குடைய நம்மவருள் அநேகர் நம் தமிழ்மொழியை அலட்சியஞ் செய்யாது கவனிப்பாராயினர். நாடோறும் புதுமையான கதைகளும் நாடகங்களும் பத்திரிகைகளும் செய்யுட் பிரபந்தங்களும் வெளியாகின்றன. தமிழ்ப் பிரசங்கங்களும் தமிழ்ச் சங்கங்களும் நடந்து வருகின்றன. காலத்தினருமையும் பணத்தினருமையும் நம்மவரால் நன்குணரப்பட்டு அவை தக்கவாறு செலவிடப்படுகின்றன. வீண்பொழுது போக்கும் வீண்பொருட் செலவும் குறைந்து கொண்டுவருகின்றன.

இவை யாவற்றையும் உற்றுநோக்குநருள் யாவரே உலகம் உயர்நிலை நோக்கிச் செல்லாது வீழ்நிலை நோக்கிச் செல்லுகின்றது என்று கூறப்புகுவார்? அறிவுடையீர்காள்! அன்னணங் கூறுவோர் எப்பொருளினும் இன்பங் காணுது உழலும் புன்மக்களாகவே மதிக்கப்படுவா ரென்பதில் ஐயமு முண்டோ? இது நிற்க. இவ்வாறு நாடோறும் பல திறத்தானும் விரிந்து செறிந்து நன்மையரும்பி இன்பமலர்ந்து வானுறவோங்கும் இவ்வுலகநன்மரம்

என்றும் சூம்பிச் சாம்பாதவாறும் மக்களுக்கு இன்னிழல் கொடுக்குமாறும் எல்லாம் வல்ல முழுமுதற் கடவுள் கருணைமழை பொழிந்து அதனைக் காப்பாராக.

பத்திராதிபர்.

---

## தமிழுலகம்.

புது நூற்றாண்டு பிறந்து யாவும் இனிது செல்லும் என்றெண்ணி எதிர்பார்த்து நின்ற நந்தந் தமிழுலகம் பெரிதுந் துன்புறத்தக்கதோர் நிகழ்ச்சி கேட்டு நடுநடுங்குகின்றது. அந்தோ! புதுநூற்றாண்டு பிறந்த அற்றை ஞான்றே செந்தமிழுலகிற் செம்மை சான்று விளங்கிய நமது ராவ்பஹதூர் - சி. வை. தாமோதரம் பிள்ளையவர்கள் இவ்வுலக வாழ்வை நீத்துச் சிவபிரான் திருவடி நீழலிற் சென்று சேர்ந்தனர். என்னே உலகம்! என்னே வாழ்க்கை!!

தமிழ்ப்புலவ ரில்லங்களிற் பனையோலைச் சுவடிகளிற் சிறைப்பட்டுக் கிடந்து தவித்த செந்தமிழணங்கு நல்லாடை யுடுத்துத் தெலுங்கு, கன்னடமாதிய பாங்கிமாரோடும் அச்சுவாகனமேறி நாடெங்கும் உலாவருமாறு செய்தற்கட் பேரூக்கமெடுத்து உழைத்து நின்ற நம் பிள்ளையவர்கள் காலஞ் சென்றன ரென்பதுணர்ந்த யாவரே தமது அவல மெய்ப்பாட்டினை யடக்க வல்லார்? அவ்வாறாக யாம் எமது துன்பத்தையடக்கப் புகுதலெவன்? மனத்தின் கணுள்ள துக்கம் வாய்விடுத்துக் கூறுமிடத்துச் சிறிது தணியுமன்றே. அங்ஙனங் கூறுதற்கட் குறை நிகழுமாயினும் உலகம் எம்மைப் பொறுக்க.

### வாழ்க்கை.

நமது தாமோதரம் பிள்ளையவர்கள் யாழ்ப்பாணத்துச் சிறுப்பிட்டி வைரவநாத பிள்ளையவர்களது குமாரர். இவர் கி. பி. 1832 - ஆம் வருடம் பிறந்தனர். ஆண்டுள்ள யாழ்ப்பாணத்துக் கல்லூரியில் ஆங்கிலமும், சுன்னாகம் முத்துக்குமாரசுவாமி பிள்ளையவர்களிடம் தமிழ்க்கலையும் பயின்றனர். 1852-ஆம் வருடம் அக்கல்லூரியினின்றும் பரீட்சையிற்றேறிப் பட்டம் பெற்று வெளிப்போந்தனர்.

பின்னர்க் கோப்பாயி லுள்ளதோர் கல்விச் சாலையிற் போதகாசிரியராய் அமர்ந்தனர். அக்காலத்துச் சென்னையில் விளங்கிய பேர்ஸிவல் துரையவர்களால் அழைக்கப்பட்டுச் சென்னைக்குப் போந்து தினவர்த்தமானி யென்றதோர் தமிழ்ப் பத்திரிகையை நாடோறும் பதிப்பித்து வந்தனர். அங்ஙனம் பதிப்பித்தற்கண் நமது பிள்ளையவர்கள் உலகிற்குக் காட்டிய தமிழ் நூற்பயிற்சியும் ஆராய்ச்சி வன்மையும் அவர்க்கு மிக்கபுகழ் விளைத்தன. இஃதுணர்ந்த துரைத்தனத்தார் பிள்ளையவர்களை இராசதானிக்கலாசாலையில் தமிழ்ப்பண்டிதராய் அமரும்படிவேண்டிக்கொண்டனர். அங்ஙனம் அக்கலாசாலையில் தமிழ்ப்புலமை நடாத்திவருபவர் 1857-ஆம் வருஷத்து முதன்முதலில் ஏற்பட்ட சென்னைச் சர்வகலாசாலைப் பிரவேச பரீட்சையில் தேறினர். பின்னர் அவ்வாறு தேறி நான்கு திங்கள் கழியுமுன் 1858-ஆம் வருடத்தில் நிகழ்ந்த பி.ஏ. பட்டப் பரீட்சையிலுந்தேறினர். எனவே நமது தாமோதரம் பிள்ளையவர்கள் சென்னைச் சர்வகலாசாலையில் முதலிற் பி. ஏ. பட்டம் பெற்ற இருவருள் ஒருவராவர். பிள்ளையவர்கள் பி. ஏ. பட்டம் பெற்றவுடன் கள்ளிக்கோட்டைக் கல்விச் சாலையில் உதவி உபாத்தியாயரா யனுப்பப்பட்டனர். ஆண்டிருந்து சென்னைக் கோட்டையில் உயரியதோர் உத்தியோகத்தி லமர்ந்து பலதுரைகளாலும் தமது வாய்மை, நேர்மை, மேற்கொண்ட கடமைதவறுமை ஆதிய நற்குணங்கள் காரணமாகப் புகழப்பெற்று விளங்கி 1882-ஆம் வருடம் உபகாரச் சம்பளம் பெற்று வேலையினீங்கினர். இடையில் இவர் கோட்டையில் வேலையிலமர்ந்திருக்கும்போழ்தே 1871 - ஆம் வருடம் பி. எல். பரீட்சையிலுந் தேறியிருந்தனர். ஆகவே தாம் வேலையினீங்கினவுடனே 1884-ஆம் வருடம் குடந்தையம்பதியில் நியாயவக்தாவாய் அமர்ந்தனர். அதன்மேற் புதுக்கோட்டைச் சமஸ்தானத்தில் நியாயாதிபதியாயிருந்து உலகிற்கு நன்மை செய்வாராயினர். அக்காலத்தில் அவர்க்கு மகப்பிரிவு நேரிட்டமையின் வேலையை விடுத்துச் சென்னைக்கு வந்துவிட்டனர்.

## தமிழ்நூற் பதிப்பு.

இதுநிற்க. குடந்தையிலிருந்தபொழுது அச்சிடப்படாத பல அருமையான தமிழ்நூல்களைப் பனையோலைச் சுவடிகளைக் கொண்டு

பரிசோதித்துப் பதிப்பிக்கத் தொடங்கினர், அவ்வாறு அவர் பதிப்பித்த நூல்களுட் பெரும்பாலன சாமானிய சனங்கள் பயிலாதனவும் அதிகமாய் விலைப்படாதனவுமாகிய இலக்கணநூல்களாம். தமிழின்மீது ஆர்வம் மிகுந்த இற்றைஞான்றினும் அவைகள் பெரிதுங் கவனிக்கப் படுகின்றிலவாமாக அந்நாட்களில் அவை விலைப்பட்டில என்பதோர் ஆச்சரியமன்று. அன்னணம் அவர் பிரசுரித்த இலக்கண நூல்கள் தோல்காப்பிய நச்சினுர்க்கினியம், தோல்காப்பியச் சேனுவரையம், வீரசோழியம், இறையனுரகப் பொருளுரை, இலக்கண விளக்கவுரை என்பனவாம். பின்னர்த் தமிழிலக்கியங்களுட் பெரிதும் திரிசொற்களான் யாக்கப்பட்ட தணிகைப்புராணமும் சிறுகாப்பியங்களுள் ஒன்றெனக் கருதப்படும் சூளாமணியும் பிள்ளையவர்கள் முயற்சியான் வெளிப்போந்தன. இவைதம்முட் பல பகுதிகள் பிரதமகலாபரீட்சைக்கும், பி. ஏ., எம். ஏ., பரீட்சைகட்கும், அவ்வக் காலங்களிற் பாடங்களாய் ஏற்படுத்தப்பட்டன. இவர் பதிப்பித்த நூல்களெல்லாம் இவரது சங்கச்செய்யுட் பழக்கத்தினையும், நுணுகியுணருங் கூரியமதியினையும், ஆராய்ச்சிவன்மையினையும் பெரிதும் புலப்படுத்துகின்றன. அவ்வந் நூல்களின் பதிப்புரைக்கட் பல அரிய பெரிய விடயங்களைச் சிக்கறவாராய்ந்து தெள்ளிதிற் றெரித்துளர். இவர் தமது இறுதிக்காலத்தில் எட்டுத்தொகையு ளொன்ருகிய அகநானூற்றினைப் பரிசோதித்து வந்தனர். ஐயகோ! அகப்பாட்டு அகப்பாட்டாகவே நின்றது.

## புலவர் மதிப்பு.

இவ்வாறு மிகப் பெருமை வாய்ந்த நூல்களைப் பரிசோதித்துப் பதிப்பித்தமை காரணமாக இவர்க்குப்புகழ் மிகுவதாயிற்று. தமிழ்ப் புலவர்களிடத்து மிக்க நன்குமதிக்கற் பாடுற்றனர். பற்பல நாட்டுத் தமிழ்ப் பண்டிதர்களும் இவரைச் சலஞ்சலத்தைச் சூழும் வலம்புரியெனச் சூழ்வாராயினுர்.

## பரீட்சிக்குந் திறமை.

இத்தகைய புலவர் பெருமானது ஆற்றலும் நல்லொழுக்கமுங் கண்டு சென்னைச்சர்வகலாசாலையார் இவரைப் பரீட்சைக் கர்த்தராகப் பல்லாண்டுகளில் நியமித்தனர். இவர் அங்ஙனம் அத்தொழில் புரியுமிடத்துத் தமக்கியல்பாயுள்ள நேர்மையும் மாணவரிட

த்து இரக்கமுங் காட்டியேவந்தனர். சென்னைச் சர்வகலாசாலையில் தமிழ்ப் பரீட்சைக் கர்த்தர்களா யிருந்த கனவான்களெவரும் இவரது கல்விக்கு ஈடாவாரல்லர். இவர் பரீட்சை வினாக்களெல்லாம் மாணாக்கரது நுட்பமதியினைப் புலப்படுத்துவனவாம். மாணாக்கர் இயல்பறிந்தும் வகுப்பின் தரமறிந்தும் குறித்தகால வளவறிந்தும் வினாப்பத்திரிகை கொடுக்கும் பரீட்சாதிகாரியை யிழந்த தமிழ்மாணாக்கரின் துரதிர்ஷ்டத்தை யென்னென்பேம்! இத்துணை நலம்வாய்ந்த இவர் நம் சென்னைச் சர்வகலாசாலை யவயவிகளுள் ஒருவராகவு மிருந்தனர்.

## நூலாசிரியத் தன்மை.

பிள்ளையவர்கள் பதிப்பித்த நூல்கள் போகத் தாமே புனைந்தியற்றியன **கட்டளைக் கலித்துறை** யென்னுமோர் இலக்கணநூலும், **வசன சூளாமணி** யென்னுமோர் உரைநடை நூலும், **சைவமகத்துவ போதம்** என்னு மொரு சைவசமய நூலும், **ஆறும்வாசக புத்தகம், ஏழாம் வாசக புத்தகம்** என்னும் கல்வி யறிவிற்றேறும் இளஞ்சிறார்க்கென வகுத்த வசன நூல்களும் பிறவுமாம். இவரது உரைநடை செந்தமிழ்த் திரிசொற்கள் மலிந்து சொல்லடுக்கும் பதசாலங்களும் இயைந்து கட்டுரைச் சுவைநயங் காட்டி இயல்வது. இவ்வியல்புபற்றியன்றே இவர்தம் வசன சூளாமணி பிரதமகலா பரீட்சைப் பாடமா யேற்பட்டதூஉ மென்க.

## ஒழுக்கம்.

இவரால் ஆதரிக்கப்பட்டோரும் இவர்க்கு நண்பராய் நண்ணினோரும் பலதிறத்தினர். தென்னாடெங்கும் இவரையறியாதார் எவருமில்லை. இவர் உண்மைதோன்ற வாதஞ்செய்வுழித் தமது நண்பர்களுக்காகச் சார்ந்து பேசியும் பிறருக்காக விலகிப் பேசியும் ஒழுகுறு மியல்புடைய சில போலிமாக்கள் போலாது எப்பொழுதும் நடுவு நிலைமை குன்றாதவாறு நடந்து வந்த நற்றமிழாளர். தவறினர் நண்பரேயாயினும் னொதுமலரேயாயினும் அவரை நல்லறிவூட்டித் தெருட்டுவார் இவர். நம் பிள்ளையவர்களும் திவான் பஹதூர்-வி. கிருஷ்ணமாசாரியரவர்களும் நண்பர்களேயாயினும் மாறுபட்ட இடங்கள் பலவுள. இன்னும் இவர் தற்காலத்துப் பிறர்வன்மை கண்டு அழுக்காறடையும் புன்மக்கள்

போலாது பிறரது பேராற்றல் கண்டுழி யெல்லாம் அன்னாரை வியந்தும் ஆதரித்தும் பரிசிலளித்தும் போற்றியும் கொண்டாடியும் ஒழுகிவந்தவர். அந்தோ! இத்தகைய அன்புடை யண்ணலை இழந்த தமிழ்வாணர் பெரிதும் கறவையிற் பிரிந்த கன்றெனக் கையற்று அயர்வார்கள் என்பதொருதலை.

## பட்டப் பேறு.

நமது சென்னைத் துரைத்தனத்தார் எப்பொழுதும் யோக்கியதை கண்டுழி யெல்லாம் கவனித்துத் தக்கபட்டமளித்து வருபவராதலின் நமது தாமோதரம் பிள்ளை யவர்கட்கும் ருவ் பஹதூர் என்ற பட்டத்தினை 1895 - ஆம் வருடத்தில் அளித்தார்கள்; அஃதன்றியும் தமக்குத் தமிழ் மொழியின் கண் ஐயப்பாடு நேர்ந்துழி யெல்லாம் அவரிடங் கேட்டுத் தெளிந்தனர். இவ்வாறு இவர் துரைத்தனத்தார்க்கேயன்றிப்பிறர்க்கும் நிகழ்ந்த ஐயங்களையும் அறுத்தனர். எனவே, இவர் வாய்மொழி பலர்க்கும் மேற்கோளாயின.

## இறுதிக்காலம்.

இவரது தேக சௌக்கியம் 1888 - ஆம் வருஷம் நிகழ்ந்த புத்திர சோகங் காரணமாகச் சிறிது சிறிதாகக் குறையத் தலைப்பட்டு இறுதியிற் சென்ற ஆறுமாதமாக மார்பு நோய் கண்டு வைத்திய நூல் வல்ல பலருதவி செய்துஞ் செவ்வைப்படாது போயிற்று. ஆகவே நற்குணமும் நேரிய வாழ்க்கையு முடையவரும், செந்தமிழ்ப் புலவரும், பல தமிழ்நூற் பதிப்பாசிரியரும், சென்னைச் சர்வ கலாசாலைப் பல்லாட்டைப் பரீட்சைக் கர்த்தரும், தமிழ் வள்ளலாரும், சென்னைச் சர்வகலாசாலை யவயவிகளுளொருவரும், நமது ஞானபோதினிப் பத்திரிகைக்குப் பேராதரவா யிருந்தவரும், பாவலர் நண்பரும், எம்மீது ஆர்வமுடையாரும், எம்மைத் திராவிடசாஸ்திரி யென்றழைப்பாரும் ஆகிய நமது தாமோதரம் பிள்ளையவர்கள் இவ்வுலகினின்றும் நீங்கினார். இத்தகைய புலவர் கோமான் இறந்துபட்டார் என்பது தெரிந்த தமிழர் குழாம் இரங்குமாறு இற்றென எம்மாற் புனைதலியலாது. இவர் இறந்துபாடு தமிழுலகஞ்செய்த பாவமோ தேவர் தங்கயம்பற்றிச் செய்த கொடுமையமோ? அறியேம்.

இனிக் காட்டகத்து மலர்ந்து மனிதர்க்கு இன்பம் பயவாது தாமேயழியும் மலர்கள்போலப் பல தமிழ்வித்துவான்கள் உலகில் வெளிப்போதராது காலஞ்சென்றனர்; அன்னார் கதி மிகவு மிரங்கத்தக்கதே. இவ்வாறன்றி நமது தாமோதரம் பிள்ளை யவர்கள் பல நூல்கள் அச்சிட்டும் சில நூல்க ளியற்றியும் பலரோடளவளாவியு மிருந்து காலஞ் சென்றமையின் இவர் இறந்தும் இறவாதவரே யென்பது யாவரு முணர்ந்ததே.

காமோதி வண்டர் கடிமலர்த்தேன் கூட்டுதல்போ
ஞமோது செந்தமிழி னன்னூல் பலதொகுத்த
தாமோ தரம்பிள்ளை சால்பெடுத்துச் சாற்றவெவர்
தாமோ தரமுடையார் தண்டமிழ்ச்செந் நாப்புலவீர்!

வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரி.

---

## * பாரத ஸாரம்.

---

வேதமும் வேதம் விளம்புமெய்ப் பொருளு மப்பொருள் விதங்களும் பஞ்ச
பூதமும் புலனும் புலன்களின் பயனு மப்பயன் பொலிவுற நுகரு
ஞாதமு முலகம் படைத்தளித் தழித்து ஞானமா யகிலமு நிறைவுற்
றாதியு நடுவு முடிவுமாய் நின்ற வாதியா னடியிணை பணிவாம்.

### அத்தியாயம். III.

(பாண்டவர்களுக்கு வந்த ஆபத்துக்களும் அவற்றின் நிவாரணமும், அவர்தம் ஜயமும்)

184-ஆம் பக்கத் தொடர்ச்சி.

பாஞ்சால தேசத்திற் கரசனாகிய துருபதன் தனது புத்திரி திரௌபதைக் குரிய நாயகன் அர்ச்சுனன் தானெனத் தீர்மானம் செய்துகொண்டு, பஞ்சபாண்டவர்கள் தங்கள் நாட்டி லில்லையே யென வேக்கங்கொண்டு ஒரு யுக்தி செய்து அவர்களைத் தன் தனையை ஸ்வயம்வரத்திற்கு வரவழைத்து அர்ச்சுனனுக்குத் தன் மகளை மாலையிடச் செய்யலா மென்று மனதைத் திடஞ்செய்து கொண்டான். ஸ்வயம்வர சமாசாரம் பரதகண்ட முழுதும் பரவச் செய்தான். துரோணர்தம் மாணாக்கர்களில் வில்வித்தையிற் சிறந்தவன் அர்ச்சுனன் என்பது துருபதனுக்கு நன்றாய்த் தெரிந்தவிஷயமல்லவா! அவனும் அதற்குத் தகுந்தபடி அர்ச்சுனனைத்தவிர வேறொருவரும் வளைக்க முடியாத

---

* Adapted from Mrs. Annie Besant's—"Mahabharata."

ஒரு பெரியவில் தயார் செய்து ஸ்வயம்வர மண்டபத்து நாட்டி ஆகாயத்தில் அதிக தூரத்தில் எப்போதும் சுழன்று கொண்டேயிருக்கும்படியானமச்சயந்திரம் ஒன்று கட்டி, அந்த வில்லை வளைத்து நாணேற்றி எவனொருவன் ஏக காலத்தில் ஐந்து பாணந்தொடுத்து அவைபனைத்தினையும் மச்சயந்திரத்தின்மீது விட்டு அதைக் கீழே அறுந்து விழும்படி செய்கிறானோ அவன்தான் தன் மகளுக்குரிய மணமகனுவானென்று முரசறைவித்தான். அவ்வாறு செய்வதற்கு அர்ச்சுனனொருவன்தான் உளனென்பது துருபதனுடைய துணிபு. ஸ்வயம்வரத்திற்குவந்திருந்த அரசர்களோ அநேகர். அவர்களது மனமுங் கண்ணும் துரோபதையினிடத்து மயங்கி நின்றன. வியாசருடைய தூண்டுதலினால் பாண்டவர்களும் இச்சுவயம்வரத்திற்கு வந்து சேர்ந்தார்கள். வேடிக்கை பார்க்கும் பொருட்டு வலதேவ ரென்னும் மறு பெயர் பூண்ட பலராமரும் அவர்தம் தம்பி கிருஷ்ண பகவானும் அவ்விடம் வந்திருந்தார்கள். கருணையங் கடலாகிய பகவான் தன்னருளுருவாகிய கண்கொண்டு அருச்சுனனையும் அவன்றன் சகோதரர்களையும் கண்டார். முதற்றரம் நரனென்னுந் தன் சிநேகிதனைப்பார்த்தது இவ்வுலகி லிப்போதுதான்.

ஸ்வயம்வரத்திற்குரிய முதற்சடங்குகளும் முடிந்தன. அரசர் குழாங்களிலிருந்த ஒவ்வொருவரும் வில்லை யெடுத்து வளைத்துப்பார்த்தார்கள். வளைக்கவே முடியவில்லை. தனக்குரிய நாயகனை நாடி நின்ற துரோபதையின் நயனங்களும் சோர்வுற்றன. கடைசியிற் கர்ணன் தன் பீடத்திருந்து ஒரு குதிகுதித் தெழுந்து வில்லிருக்கும் இடத்தைச் சேர்ந்து அதனை அதிகச் சுலபமாயெடுத்து நாணேற்றிப் பாணத்தையுந் தொடுத்தான்.

பாண்டவர்களும் தங்களெண்ணம் பயன்படா தென நினைத்தார்கள். இதற்குள் வில்லைக் கர்ணன் வளைத்ததைக்கண்ட கன்னிகை கணீரென்ற சங்கத்தோடு சூதனைத் (தேர்ப்பாகனை) தனக்கு நாயகனாகக் கொள்ளே னென்றாள். கர்ணனோ கோபத்துடன் வில்லை விரைவாய் எறிந்துவிட்டுத் தன்னிடஞ் சென்றான். பிறகு, பிராமணவேடம் பூண்டு பார்வைக்குப் பலாட்டியனா யில்லாமற் போனபோதிலும் ஆஜானுபாகுவாயிருந்த அர்ச்சுனன் தான் முன் சென்று வில்லை யெடுத்துச் சிரமமில்லாமலே நாணேற்றி ஐந்து பாணமும் தொடுத்து மச்சயந்திரம் அறுந்துவிழுமாறு விடுத்தனன். ஆகாயத்திலிருந்து புஷ்பமாரி பெய்தது. நாற்புறமும் வாத்திய கோஷமுழங்கியது.

'பூமழை சொரிந்தார் விண்ணோர் பொன்மழை பொழிந்த மேகம்
பாமமா கடல்க ளெல்லாம் பன்மணி தூவி யார்த்த
கோமுனிக் கணங்க ளெல்லாங் கூறின வாசி சொற்ற
நாமவேற் றிரௌப தைக்கு நல்வரன் கிடைத்தா னென்று.'

விலையுயர்ந்ததும் கண்ணுக்கு இரமணீயமானதுமான ஆடை ஆபரணங்களால் அலங்கரிக்கப்பெற்ற துரோபதை மந்தகாசத்தோடும் ஒரு

கையில் தங்கப் பாத்திரத்தில் ஜலமும் மற்றொருகையில் மாலையுங்கொண்டு அர்ச்சுனனை யணுகித் தான் தனக்கு நாயகனாக வரித்ததற் கறிகுறியாக மன் மதன்போன்ற அழகுடையான் மீது மணமாலையை யிட்டு வணங்கி அவன ருகில் நின்றனள். அவன் அவ்விடத்தைவிட்டுச் செல்ல ஆரம்பித்தவு டன் அவளும் உடன்சென்றனள். கூடியிருந்த அரசர் குழாத்துள் ஒரு முழக்கம் உண்டாயிற்று. அது யாது? 'க்ஷத்திரிய வம்சத் துதித்த பெண் க்ஷத்திரியனைத் தனக்கு நாயகனாக வரியாது ஒருபிராமணனை நாயக னாகக் கோடலியலாது!' என்பது தான். அவர்களி லனேகர் ஒருங்குகூடி அர்ச்சுனனைப் பின்றொடரும் துரோபதையைப் பலாத்காரமாய் இழுத்துக் கொண்டுவந்து விட ஆரம்பித்தார்கள். அர்ச்சுனன் ஒருவில்லை யெடுத்தான். பீமன் ஒருமரத்தைப் பிடுங்கி நுனியையும் அடியையும் தரித்து அதனைத் தனக்கோர் ஆயுதமாகக் கொண்டான். இவர்க ளிருவருமாக அர்ச்சுனனு டன் போர் புரியவந்த அரசர்களனைவரையு மெதிர்த்து யுத்தஞ் செய்தார் கள். அங்கிருந்த சல்லியனும், கர்ணனும், துரியோதனனும் மற்றெல்லோ ரும் பிராமணரிருவர் இவ்வாறு க்ஷத்திரிய சிம்மங்களோடு நெடுநேரம் நின்று போர் புரிவதற்கு அதிக ஆச்சரிய மடைந்து வெட்கினார்கள். கடை சியாகக் கிருஷ்ணபகவான் தான் முன் வந்து சண்டையை விலக்கித் துரோ பதை அர்ச்சுனன் பின் சென்றது நியாயமென்ச் சொல்லவே சண்டையும் ஒழிந்தது. ஐவரும் தாங்கள் தங்கியிருந்த உறைவிடத்திற்குத் தமதன்னை யை நோக்கிச் சென்றார்கள்.

அவர்கள் வீட்டுவாயிலில் நுழையும்போது குந்திதேவியானவள் வீட்டிலே ஒருள்ளறையி லிருந்தாள். விளையாட்டிற்காக இவர்கள், "இன்றைக்ககப்பட் டபிக்ஷையைக் கொணர்ந்தோ" மென்றார்கள். அதன்பொருளைக் கவனியாது, "நீங்களெல்லோரும் சுகமா யனுபவியுங்கள்" என்றாள். வெளியில் வந்து பார்க்கத் துரோபதை யிருக்கக்கண்டு "என்ன அவசரம்! இப்படி யறியாது சொல்லி விட்டோம்!" என்று பதைபதைத்துக் கையை நெரித்துக்கொண் டாள். தருமரை நோக்கி "அப்பா! என்வாக்கும் பொய்த்துப் போகக் கூ டாதே. துரோபதைக்கும் பாவம் வந்து சம்பவித்தல் தகாதே. இதற் கென்ன செய்யலாம்" என, அதற்குத் தருமர், 'அதற்கென்ன! அர்ச்சுனன் தன் விற்றிறத்தினால் அவளைக்கொண்டான். அவனே அவளை மணம்புரியட் டும்' என்னலும், தனக்கு முதியவர் இருவரிருக்கத் தான் முந்தி விவாகம் செய்து கொள்ளல் கூடாதென்றான் விஜயன். பிறகு, வியாசர் துரோப தையினுடைய மணத்தைக் குறித்துச் சொன்னது தருமருக்குத் தற்காலம் ஞாபகத்திற்கு வந்தது. விதிப்பயன்படி அவள் ஐந்து பேருக்கும் மனைவியா தல் வேண்டும் என்றார் தருமர். இதற்குள் ஸ்ரீ கிருஷ்ணபகவானும் அங்கு வ ந்து சேர்ந்தார். அவர் தமக்கு முதியோனாகிய தருமராஜன் பாதபங்கஜத்து வீழ்ந்து நமஸ்கரித்துத் தான் ஸ்ரீ கிருஷ்ண னென்பதை அவருக்குத்தெரிவித்

தார். அவரை இன்னாரென அறிந்தவுடன் அனைவரும் ஆனந்தங்கொண்டு களிக்கூத்தாடினார்கள். அதிககாலம் அவர்களுட னிருந்தால் ஐவருடைய வூரும் பேரும் நிலைமையுந் தெரிந்துபோ மென்று தான் சீக்கிரம் செலவு பெற்றுக்கொண்டு சென்றார். அன்றிரவு போஜனமுடிந்ததும், ஐவரும் ஒருவர் பக்கத்தொருவர் படுத்துறங்கினார்கள். அவர்கள் தலைப்புறம் தாயும் பாதத்திற் பத்தினியும் படுத்துக் கொண்டார்கள். நித்திரை செய்வதற்கு முந்திப் பற்பல அஸ்திர சஸ்திரங்களைப் பற்றியும் யுத்தங்களைப் பற்றியும் பேசிக்கொண்டிருந்தார்கள். திஷ்டத்துய்மன் தனது சங்கையை க்ஷத்திரியனுக்குக் கொடுப்பதற்கின்றி ஒரு பிராமணனுக்குக் கொடுக்க வேண்டிவந்ததேயென்று ஏக்கங்கொண்டு அவள் நிலைமையைக் குறித்துப் பரிதபித்து ஐவரிருந்த இடத்தைச் சேர்ந்து அவ்வீட்டுப் புறத்து ஒதுங்கி நின்று அவர்கள் பேசும் விஷயத்தைக் கவனித்து அவர்கள் க்ஷத்திரியராய்த்தானிருக்க வேண்டுமென்று தீர்மானித்து உடனே தனது தந்தையினிடம் வந்து அவர்கள் வைசியருமல்லர், சூத்திரருமல்லர், அவர்கள் பூண்டது பிராமணவேடமேயொழிய உண்மையில் உயர்ந்த குலத்துதித்த க்ஷத்திரியர்கள் தாமென்று உறுதியாய் அதற்குரிய காரணங்களோடும் சொன்னான். மேலும் அவர்கள் பாண்டு புத்திரர்களாகத்தான் இருக்க வேண்டுமே யன்றி வேறெவருமல்லரென்றான்.

இதைக் கேள்வியுற்ற துருபதனுடைய புஜங்கள் பூரித்தன. ஆயினும் இதனுண்மை ஸ்திரமாய்த் தெரியும்பொருட்டு ஒரு புரோகிதனை அவர்களிடம் அனுப்புவித்தான். தருமர் அவனுக்குத் தாங்களின்னாரென்பதைத் தெரிவிக்காமல் துரோபதையைச் சுயம்வரத்தில் தாங்கள் சன்மார்க்கமாய்க் கொண்டதே யொழிய துன்மார்க்கத்திற் கொள்ளவில்லை யென்றும் அரசன் இதனிமித்தம் வருத்தப்பட லாகாதென்றும் சொல்லி அனுப்புவித்து விட்டார். அரசன் இவர்களுக்கொருவிருந்து செய்து இவர்களின்னவருணத்தாரென நிச்சயிக்கும் பொருட்டு, பிரம க்ஷத்திரிய வைசிய சூத்திரரென்னும் நான்கு வருணத்தாருள் ஒவ்வொரு வகுப்பினரும் விரும்பக்கூடிய பற்பல சிறப்புப்பொருள்களை அவர்கட்கெதிரில் வைத்தான். போஜனம் முடிந்ததும் இவர்கள் அதிக உற்சாகத்துடன் அவர்களெதிரிலிருந்த அநேக பொருள்களின்மேல் நாட்டத்தைச் செலுத்தாது அஸ்திர சஸ்திரம் இருந்தவிடம் சென்று அவற்றைத் தம் கைக்கொண்டார்கள். அதினின்றும் அரசன் இவர்கள் க்ஷத்திரியரென்றே தீர்மானித்தான். அவர்களை அணுகித் தாங்கள் இன்னாரெனத் தெரிந்து கொள்ள விருப்பமுடையவனாயிருக்கிறேனென்று சொல்லியபோது தருமர் தாமும் மற்றவரும் இன்னாரெனத் தெரிவித்து அரக்கு மாளிகையினின்றுந் தப்பித்துக்கொண்டு வந்த செய்தியினையும் அதற்குப்பிறகு நடந்த இடும்பாசுர பகாசுரவதங்களையும் இடையில் நடந்த மற்ற விஷயங்களையும் சொல்லி முடித்தார்.

பிறகு துரோபதையினுடைய கலியாண விஷயத்தைக்குறித்து ஒரு முடிவு செய்ய வேண்டி வந்தது. துருபதன் ஐந்து சகோதரர்களில் எவரையேனும் தன் மகள் மணம் புரியலாமென்றான். யுதிஷ்டிரர் (தருமர்) துரோபதை ஐவருக்கும் மனைவியாதல் வேண்டுமென்பது தம் தாயின் கட்டளையென்று சொன்னார். துருபதன் தருமரைநோக்கி "அப்பா, சுசிலனே! ஒருத்தி எப்படி ஐந்து நாயகனை அடைதல் கூடும்? சுருதி யுக்தி அநுபவமென்னு மூன்றுக்கும் முரண்பாடான விஷயமாயிற்றே இது? சாஸ்திர மெல்லாவற்றிலும் வல்லவனல்லனோ நீ!" என்று சொல்லலும், அவர் "பொய்யென்பதே இதுவரையில் என் நா அறியாது. பாவ காரியத்திற்கும் என்மன மெழாது. 'நானு மறியேன் அவளும் பொய் சொல்லாள்' என்பதற்கேற்ப எந்தாய் உத்திரவு செய்தாள். அஃது எனக்குப் பிழையெனத் தோன்ற வில்லை" என்றார். இப்படிச் சொன்னது துருபதனுக்குத் திருப்திகரமானதாயில்லை. இந்த விஷயத்தைக்குறித்து இருவரும் விவாதம் செய்து கொண்டிருக்கையில் வேதவியாசர் வந்து சேர்ந்தார். துருபதன் இதைக் குறித்து அவரிடம் விண்ணப்பம் செய்து கொண்டான். வியாசர் துருபதனைக்கொஞ்ச தூரத்திற்கு அழைத்துக்கொண்டு போய்ப் பாண்டவர் ஐவருள் அர்ச்சுனன் தவிர மற்றவர்கள் முன்ஜன்மத்தில் இந்திரபட்டம் பெற்றிருந்தவர்களென்றும், அர்ச்சுனன் மாத்திரம் அக்காலத்து இந்திரனுடைய பிள்ளை யென்றும் தெரிவித்து அவர்களுடைய நிஜஸ்வரூபத்தையும் அவனுக்குக் காட்டினார். பிறகு துரோபதையினுடைய பூர்வ சரித்திரத்தையும், இவ்வாறு இப்போது வாய்க்க வேண்டிய காரணத்தையுஞ் சொல்லி முடித்தார். அதன்பிறகு துருபதனும் ஒருவாறு திருப்தி யடைந்தான்.

பாண்டவர்களுடைய செல்வமும் அதிகரித்துக்கொண்டே வந்தது. துவாரகையினின்று ஸ்ரீ கிருஷ்ணபகவானும் அளவிலாத்திரவியம் அனுப்புவித்துக்கொண்டே வந்தார். துரியோதனனும் அவனுடைய துன்மந்திரிகளும், பாண்டவர் அரக்கு மாளிகையினின்றுந் தப்பித்துக்கொண்டு ஓடிவிட்டார்களென்று இப்போது தெரிந்தவுடன் அவர்களைக் கொல்வதற்குரிய பல நூதன வழிகளையும் பற்றி யோசித்துக் கொண்டிருந்தார்கள். இடம் பொருளேவல் இம்மூன்றினும் விருத்தியடைவதற்குமுன் அவருடன் போர் புரிந்து அவரை ஜயித்தலே தகுதியான தென்றான் கர்ணன். பீஷ்மரோ அத்தகைய நடவடிக்கைக் குடன்படார். பாதி இராஜ்ஜியம் பாண்டவர்களுக்குப் பகிர்ந்து கொடுத்தலே நீதி யென்பது அவருடைய கொள்கை அவர் துரியோதனனை நோக்கி "அப்பா துரியோதனா! நல்ல பெயரே ஒருவனுக்குரிய பலம். பாண்டவர்கள் அரக்கு மாளிகையில் மடியாதிருந்தது

* [§ 167-200. ஆதிபருவம், வியாச பாரதம்.]

நாம் செய்த பூஜாபலன். குந்திதேவி உயிரோடிருப்பது நம்முடைய அதிர்ஷ்டம். மனிதரிற் புலி போன்றவனே! குந்தி அரக்கு மாளிகையில் இறந்தாளென்னுஞ் செய்தி கேட்ட ஜனங்களெல்லாம் உன்னை நிந்தித்தார்களேயொழிய புரோசனனை அவ்வளவு நிந்திக்கவில்லை. பாண்டவர்கள் தீக்குத் தப்பி உயிருடன் வந்தது உனது அதிர்ஷ்டமேயாம். உனக்கு வந்த கெட்ட பெயரும் ஒருவாறு மாறிவிடும். குருவம்சத் துதித்தோனே! அவர்கள் உயிரோடிருக்கும் வரையில் அவர்களுக்குரிய பாகத்தை அபகரித்துக்கொள்ள இடிக்கரசாகிய இந்திரனாலும் முடியாது பாண்டவர்க்கு நற்குணமும் ஐக்கியமும் பொருந்தியிருக்கிறது. அவர்க்குரிய பாகத்தைக் கொடாதிருத்தல் நலமன்று. நன்னெறியில் நடக்க உனக்கு விருப்பமிருக்கும் பக்ஷத்திலும், எனக்கு விரோதமாய் நடக்க விரும்பாதிருக்கும் பக்ஷத்திலும், எல்லாருடைய நல்ல அபிப்பிராயமும் நீ விரும்பும் பக்ஷத்திலும் இவ்விராஜ்ஜியத்தில் பாதி பாகம் பாண்டவர்களுக்குக் கொடுத்தல் வேண்டும் என்றார் பீஷ்மர். துரோணரும் விதுரரும் அதேமாதிரியாய் எடுத்துச் சொன்னார்கள். கர்ணன் மாத்திரம் இவர்கள் சொன்னதற்கு விரோதமாய்ச் சொல்லிக்கொண்டே வந்தான். கடைசியாக திருதராஷ்டிரர் விதுரரையனுப்பி பாண்டவர்களை அஸ்தினபுரிக்குக் கொண்டு வரும்படி சொன்னார்.

பாண்டவர்கள் ஊரை வந்து சேர்ந்ததும் ஜனங்களடைந்த ஆனந்தத்திற்கோ ரளவில்லை. திருதராஷ்டிரன் அவர்கட்கொரு பாதிராஜ்ஜியம் கொடுத்து **காண்டவபிரஸ்த** மென்னு மிடத்தில் அவர்களை யிருக்கச்செய்தான். அவ்விடம் ஒரு பெரிய பாலைவனமாயிருந்தது. இவர்கள் அங்கு சென்றதும் வியாசருடைய உதவியால் அங்கோரிடம் அமைத்து அழகிய நகரொன்று உண்டாக்கிக் கொண்டார்கள். ஜனங்கள் அதனழகைக்கண்டு ஆனந்தங்கொண்டு இந்திரன் நகராகிய அமராவதியினும் சிறந்து விளங்கும் தன்மையினால் அதற்கு **இந்திரபிரஸ்தம்** என்னும் பெயரிட்டார்கள்.

அப்பட்டணத்திருக்கையில் ஒரு நாள் **நாரத**முனிவர் அவ்விடத்திற்கு விஜயம் செய்தார். பாண்டவர்களுடன் கலந்து பேசிக்கொண்டிருந்தபோது, பொதுவில் ஒரு பத்னி இருப்பதனால் ஒரு வேளை அவர்களுடைய ஐக்கியத்திற்கு இடையூறு நேருமென்றெண்ணி அது விஷயத்தில் ஒருவித ஏற்பாடுசெய்து கொள்ளும்படிச் சொல்லிவிட்டுப் போய் விட்டார். துரோபதை ஐவரில் ஒருவரோடிருக்கும்போது மற்றவர்கள் பிரவேசிக்கக் கூடாதென்றும் அப்படி நேரிடின் பாவம் நீங்குப்பொருட்டுப் பன்னிரண்டு வருஷம் வனவாசஞ் செய்து விட்டு வரவேண்டுமென்றுந் தங்களுக்குள் ஒரு ஏற்பாடு செய்து கொண்டார்கள். அப்படி நடந்துவருநாளில் ஒரு நாள் ஒரு பிராமணனுடைய ஆடுமாடுகளை கள்ளர்கள் களவு செய்து கொண்டு போய்விட்டார்கள். அப்பிராமணன் பாண்டவர்களிடத்தில் வந்து முறையிட்டுக் கொ

ண்டான். அப்போது அர்ச்சுனன் அந்தணனுடைய பொருளை மீட்டுக் கொடுப்பதாக வாக்களித்தனன். அவனுக்கு வேண்டிய ஆயுதங்கள் தருமரும் துரோபதையுமிருந்த அறையிலிருந்தன. என் செய்வான் அருச்சுனன்! பிராமணனைக் காவாவிடில் பழி மன்னவனைச் சேரும். துஷ்ட நிக்கிரகம் சிஷ்ட பரிபாலனம் செய்யாத அரசன் பாபத்திற்காளாவன். இருதலைக் கொள்ளியினெறும்பு போன்றான் அர்ச்சுனன். அஸ்திர சஸ்திரத்திற்காக அறையில் நுழைந்தால் ஆரணியத்திற்குப் போகவேண்டிவரும். பிராமணனைக்காவாவிடில் பழிவந்து சேரும். ஆயினும்ஒருவாறு துணிவுசெய்துகொண்டான். "காட்டிற் போகவேண்டி வந்தால் தனது காயந்தான் கஷ்டப்படவேண்டிவரும். தர்மசிந்தையும் சற்கருமமும் தேகத்தைப் பார்க்கிலும் அதிகமாய்க் கவனிக்க வேண்டிய விஷயம். பஞ்சபூதங்களாலாய இவ்வுடம்பு அழியினும் புகழும் கீர்த்தியும் அதற்குப்பின்னும் நின்று நிலவும்." என்று சொல்லிக்கொண்டுதமயனும் துரோபதையுமிருந்த பள்ளியறையுட் சென்று வேண்டிய ஆயுதங்களை எடுத்துக்கொண்டு வெளி வந்து திருடர்களைப் பின்தொடர்ந்து அவர்களை வென்று ஆடுமாடுகளைப் பிராமணனிடம் சேர்த்துப் பிறகு தருமரிடஞ்சென்று அவர் தமக்குள் ஏற்பட்ட ஏற்பாட்டின்படி பன்னிரண்டு வருஷம் வனவாசஞ்செய்து விட்டு வருவதாய்ச் சொன்னான். தருமரோ வருத்தமுற்று மனத்தளர்ச்சி யடைந்து அர்ச்சுனனை நோக்கித் "தம்பி! நீ என்னறையிற் புகுந்ததற்குக் காரணம் எனக்கு நன்றாய்த்தெரியும். அதனால் எனக்கொரு வருத்தமுமில்லை. வனத்திற்கேக வேண்டாம். நான் சொல்வதைக்கேள். எனக்கொரு தீங்கிழைத்ததாகவும் எண்ணாதே. உன்குணத்திற்கோர் குறைவு நேரிடவுமில்லை"? என்று சொல்லியும் கேளாதவனாய் "உண்மையினின்றும் சிறிதேனும் பிறழேன், அது தான் எனக்குத் துணை" என்று சொல்லி விடைபெற்றுக்கொண்டு சென்று விட்டான்.

ஆரியர்க்கிருக்கும் அனேக நற்குணங்களுள் உண்மை வழியொழுகுதல் முதன்மையானது. இதனுண்மை பாரதத்தில் எவ்விடத்தும் விளங்கும். மெய்மையை விரும்பலும் பொய்மையை அகறலும் ஆரியருள் எல்லாவருணத்தார்க்கும் எல்லா மரபினருக்கும் பொருந்தியுள்ள குணம். ஒருவன் பொய் சொல்லி யொழுகுவானாயின் அவன் தன் குலத்திற்கும் கோத்திரத்திற்குங் குறை உண்டு பண்ணினவனாவன்.

அர்ச்சுனன் அவ்வாறாக தீர்த்தயாத்திரை செய்யும்பொருட்டுப் போகையில் ஒரு நதியிலிறங்கி ஸ்நாநஞ் செய்து பிறகு பூஜைசெய்து கொண்டிருக்கும்போது **உலுப்பை** என்னும் நாககன்னிகை யொருத்தி வெளி வந்து அவனை இழுத்துக்கொண்டு போய்விட்டாள். தியானம் முடிந்ததும் திரும்பிப் பார்த்தான். பிறகு அவளை இதற்கு யாது காரணம் என்று வினவ அவளும் அவன் பேரில் ஆசைகொண்டாளெனத் தெரிந்து அவருடைய விருப்

பத்திற் கியைய நடந்து மறுநாட் காலை வரையில் அவளோடிருந்தான். பிறகு அதைவிட்டுப் புறப்பட்டு பலபுண்ணிய தீர்த்தங்களில் ஸ்நாநஞ்செய்து புண்ணிய ஸ்தலங்களைத் தரிசித்து கடைசியாக **துவாரகை**க்கு வந்து சேர்ந்தான். தன் சிநேகனைப் பார்க்கும்பொருட்டு மகா பரிசுத்தாத்துமாவாகிய ஸ்ரீகிருஷ்ணபகவான் அவனிடம் வந்து அவனை அழைத்துக்கொண்டு தமதில்லஞ் சேர்ந்தார். அவ்விடத்தில் அவன் ஸ்ரீகிருஷ்ண பகவான் தங்கையாகிய **சுபத்திரை**யைப் பார்த்தலும் அவள்மீது அதிக மோகங்கொண்டான். ஸ்ரீ கிருஷ்ணபகவான் க்ஷத்திரியருடைய வழக்கப்படி தன் தங்கையைத் தூக்கிக் கொண்டு போய்விடலாமென்று அவனுக்குச் சொல்லி விட்டார். இது சங்கதி அருச்சுனன் யுதிஷ்டிரருக்குத் தெரிவித்து அவருடைய சம்மதமும் பெற்று சில நாளங்கே சமயம் பார்த்துக் கொண்டிருந்து, அது வாய்த்தபோது அவள் தனியாய் உலாவிக்கொண்டிருக்கும் தருணத்தில் அவளைத் தூக்கித் தன்னிரதத்தின் மீது வைத்துக்கொண்டு தன்னூர் நோக்கிப்புறப்பட்டு விட்டான். **யாதவரும் விருஷ்ணிகளும்** இந்தச் சங்கதி தெரிந்து அதிக கோபங் கொண்டு அர்ச்சுனனைப் பின் தொடர்ந்து போர்புரிவதற்குச் சன்னத்தரானார்கள். ஸ்ரீ கிருஷ்ணபகவான் இனியவசனங் களால் அவர்களுடைய கோபத்தை யாற்றினார். "அர்ச்சுனனைப் பின்பற்றி நல்லவார்த்தை சொல்லி அவனை யிங்கு கொண்டு வாருங்கள். அவன் அதிக சுத்தவீரன், நம்முடையகைக்கு அவனைவிட சிரேஷ்டமான புருஷன் வேறெவனகப்படப்போகிறான்" என்று பகவான்சொல்லியவளவில் அவர்கள்போய் அர்ச்சுனனைப் பின்றொடர்ந்து தோத்திரஞ் செய்து திருப்பிக்கொண்டு வந்தார்கள். துவாரகையில் சில நாளிருந்தான் அர்ச்சுனன்; பன்னிரண்டு வருஷம் முடிந்ததும் அதைவிட்டுப் புறப்பட்டு அதிக ஆடம்பரத்தோடும் பரிவாரங்களோடும், ஸ்திரீதனங்களோடும் தன்னகர்க்குச் சென்றான்; அவனுக்குச் சுபத்திரையினிடமாக **அபிமன்யு** பிறந்தனன்; இவனுடைய வாழ்நாளோ மிகவும் சுவல்பம். கீர்த்தியோ மிகவும் பெரிது; சோமன் என்னுந் தேவனுடைய புத்திரன் இவன். இவனுடைய பூர்வஜன்மத்துப் பெயர் **வர்ச்சசன்** என்பது. பூமியின் மீது பதினாறு வருஷகால மிருந்து குருக்ஷேத்திரத்திற் சண்டைசெய்து அவனுக்குக் குறித்திருந்த காலம் முடிந்ததும் சுவர்க்கம்வந்து சேரும்படி அவனுக்கு உத்திரவாயிருந்தது. *

**காண்டவ** வனத்தில் ஒருநாள் அர்ச்சுனனும் கண்ணபிரானும் விளையாடிக் கொண்டிருந்தபோது, அக்னிபகவான் பிராமண வேடம் பூண்டு அவர்களிடம் வந்து இந்திரனால் காக்கப்பட்ட அக்காண்டவ வனத்தைத் தகிக்க வேண்டி அவர்களுடைய உதவியை விரும்பினான். இதைக்குறித்தது அவன் முன்னமே பிரம்மாவுடன் யோசனை செய்ததாகவும் அவர்அதற்கு **நர நாராய**

* §201-223, 277. வியாசபாரதம், ஆதிபருவம்.

ணராயிருந்தவர்கள் அப்போது பூமியில் கிருஷ்ணார்சுனர்களா யிருக்கிறார்க ளென்றும் அவர்களிடஞ் சென்றால் உதவி செய்வார்களென்றுஞ் சொல்லக் கேட்டுஅங்கு வந்ததாக அக்னிபகவான் சொன்னார். அர்ச்சுனன் அக்னிபக வானைநோக்கி "என்னிடத்தில் தகுந்த வில்லும் வேண்டிய அம்புகளுமில்லை. தகுந்த இரதமும் அதிற் பூட்டுவதற்கு வேகமா யோடத்தக்க குதிரைகளும் வேண்டியிருக்கின்றன. கேசவனுக்கும் ஒரு பெரிய ஆயுதம் வேண்டியிருக் கிறது" என்றும், அப்புவிற் கதிபதியாகிய வருணனைக்குறித்து அக்னிபக வான் தியானித்த வளவில் அவர்வரலும் அர்ச்சுனனுக்குக் காண்டீவ மென் னும் ஒரு பெரிய வில்லையும், அம்பு என்று மருத அம்பராத்தூணியையுங் கொ டுக்கும்படிக்கும், ஸ்ரீகிருஷ்ண பகவானுக்கு பெருமைவாய்ந்த சக்கிரத்தைக் கொடுக்கும்படிக்கும் வேண்ட அவரும் அப்படியே கொடுத்துப்போனார். காண்டவ வனத்தில் அக்கினியும்பிரவேசமாய் விட்டது. அதைஅணைக்கும்படி இந்திரன் சப்தமேகங்களுக்குங் கட்டளையிட்டான். அதைத் தடுக்கும்பொ ருட்டு அர்ச்சுனன் வருணாஸ்திரம் விட்டான். அந்தவனம் பதினைந்து நாள் வரையில் எரிந்து கொண்டிருந்தது. அதினின்றும் உயிர் தப்பி ஓடியவர்கள் அறுவர். மாயனென்னும் அசுரனும் அதினின்று ஓடி வந்து தன்னைக் காப் பாற்றும்படிக்கு அர்ச்சுனனை வேண்டினான்.

இஃதிப்படி முடிந்ததும் இந்திரன் தனது சுதனாகிய அர்சுனனுடைய வல்லமைக்கும் தைரியத்திற்கும் வியந்து, அர்ச்சுனன், கேசவன் இவ்விரு வருக்கெதிரில் தோன்றி வேண்டிய வரம்பெறலாமென் றியம்பினான். அர்ச் சுனன் தனக்கு தேவாஸ்திரங்களைத்தரும்படிக்கேட்டான். அதற்கவன் "தேவ தேவோத்தமனாகிய மகாதேவன் எப்போது உன்னுடைய செயலைக் கண்டு மகிழ்கிறானோ அப்போது என்னுடைய ஆயுதமெல்லாம் உனக்குத் தந்து விடுகிறேன்" என்றான்.

ஸ்ரீ கிருஷ்ண பகவான் தனக்கும் அருச்சுனனுக்கு மிருக்கும் சினேகம் எப்போது மிடையறா திருத்தல் வேண்டு மென்னும் வரம் பெற்றார். *

மூன்ற மத்தியாய முற்றிற்று.

ஆதிபருவமும் முற்றுப்பெற்றது.

கல்குளம். குப்புசாமி முதலியார்.

---

* §224 - 246. வியாச பாரதம், ஆதிபருவம்,

# சிலப்பதிகார வாராய்ச்சி. *

(166-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

பிறகு, கோவலனுக்கும் மாதவிக்கும் மனவேற்றுமை யுண்டாகி, யொருவரைவிட் டொருவர் பிரிதலைக் கூறுகின்றார். இதற்கு, ஊரார் பலர்சேர்ந்து கொண்டாடும் விழாவின் பொருட்டுக் கடலாடச்சென்றுள்ள தருணத்தை யெடுத்துக்கொண்டிருக்கிறார். இக்காதையில், இந்திரன் பொருட்டு முற்காலத்தவர்செய்துவந்த வொரு விழாவை வருணிக்கிறார். இவ்விழா அக்காலத்தில் நடந்துவந்த தென்பதை மணிமேகலையிலும் காணலாம். சிலப்பதிகாரக் காலத்திற்கு நெடுநாள் முன்பே இவ்விழாவனுசரிக்கப்பட்டு வந்திருக்கிறதென்றும் துணியலாம். பாரதத்திற் கோகுல ஆயர்கள் விழாச்செய்யக் கண்ட கண்ணன் அவ்விழாவைத் தான் பெற்றுக்கொண்டு, அதனால் நேர்ந்த ஆபத்தைக் கோவர்த்தனகிரியைக்கொண்டு தடுத்தாண்டது இந்திரன்பொருட்டுச் செய்த விழாவன்றோ? இந்தக் காதையில், நூலாசிரியர் †புகாரின் சிறப்பைச் செவ்வனே வருணித்துளர். சேரநாட் டிளவரசராகிய இவர் வேற்றரசன் தலை நகராகிய புகாரை இவ்வளவு சிறப்பித்தது அவர்தம் நடுவுநிலைமையைக் காட்டுகின்றது. இவருடைய நகரவருணனை யானது அதிவீரராமன் வருணனையைப் போல வபூத கற்பனைகள் நிறைந்து, உயர்வு நவிர்ச்சியணிக்கிலக்கிய மாகவில்லை. கம்பன் வருணனையைப்போன்ற நயமுமில்லை. ஆயினும், உள்ளவற்றை யுள்ளப்படி யுணாப்பதிலேயும், தருணத்திற் கியையச் சொற்களைப் பெய்வதிலேயும், அணிகளைப் பயன்படுமாறு ஆள்வதிலேயும், மிகச்சமர்த்தர் என்பதைக் காட்டுகிறது. இக்காதையில் (வரிகள் 204-240) பொது மகளிரையும் அவர் தம்மிருக்கையையும் வருணித்திருப்பது மிக மேன்மையா யிருக்கின்றது. அவிடத்தில், அவர் அணிசிறந்து விளங்குவதைக் காணலாம். ஆயின், கடலாடு காதையெனப் பெயர்கொடுத்த காதையிற் கடலாடுதலையே வருணிக்க வில்லை. மாதவியையும் கோவலனையும் கடற்கரையிற் காட்டினரே யன்றி ஊரார்கடலாடினதை வருணித்திலர். கடலின் தோற்றத்தையும் அதைக் கண்டவுடன் மனிதர்களுக் குண்டாகக்கூடிய மனோ பாவங்களையும் குறித்திலர். கடலின் நிலைமையைச் சமயத்திற்கேற்ப வுத்பிரேக்ஷித்தாருமில்லை. இது மெத்த வியக்கத்தக்கதே? நமது கவிகள் கடலைப்பற்றிப் பேசச் சமயம் வாய்த்தாயின் அதை வருணியாமலும், உத்பிரேக்ஷியாமலும் விடார்கள். இராமன் முதலியோர் அணைகட்டக் கடலை நெருங்கிய பொழுது கடலைப் பலவிதத்தாலு முத்பிரேக்ஷித்துளர் கம்பநாட்டாழ்வார். சுபாகு, சுகேசர்களுடைய இன்னல் சகிக்கமாட்டாது பாற்கடலுடையானிடத்துத் தேவதைகள் முறையிடச் சென்றபொழுது வருணிக்கிறார் ஒட்டக்கூத்தர். தன் பத்தினியைத்

---

* 5-வது. இந்திர விழவூரெடுத்த காதை. 6 - வது. கடலாடு காதை. 7 - வது கானல் வரி. 8-வது. வேனிற்காதை. 9-வது கனாத்திற முரைத்த காதை.

† புகார்=காவிரிப்பூம் பட்டினம்.

தணர்ந்து கடற்கரை வழியே நளன் செல்லும்பொழுது வெகு சேர்த்தியாய் வருணித்துளர் புகழேந்தி. மற்றும் வடமொழி, ஆங்கிலக் கவிவாணரு மப்படியே. நம தாசிரியர்க்குமட்டும் அது தோன்றவில்லை. இதுவே நாம் கூறியபடி அவர் குறைக்கு மற்றோர் சான்ருகும். இதற்கீடாக, நமதாசிரியர் புகாரையும், அங்குள்ள ஆவண வீதியையும், பண்டக சாலைகளையும் விவரமாய் வருணித்திருக்கிருர். இத்தகைய பொருள்களை வருணிப்பதில் நமது இளங்கோவடிகள் ஒப்புயர் வற்றவர். இக்காதையில், அக்காலத்தவர்கள் பூண்டிருந்த ஆடையாபரணங்களையும், இக்காலத் திருப்பதுபோல வக்காலத்தும் கப்பல்களை நடத்துவதற்குத் தீபஸ்தம்ப மிருந்த தென்பதையும், இப்பொழுது பலகையிற்றீட்டியிருப்பதுபோல்,அப்பொழுதும், ஒவ்வொரு கடையிலும் மின்னின்ன பண்டங்கள் விற்கப்படுமென்பதைக் காட்டப் பலநிறமுள்ள கொடிச் சீலைகளுபார்த்தப்பட் டிருந்தன வென்பதையும், கூறியிருக்கிருர்.

மாதவியையும் கோவலனையும் பிரிப்பதற்கோர் முகாந்திரங் கற்பித்திருக்கிருர். அதாவது, அவ்விருவர்களும், கடற்கரையி லுட்கார்ந்து யாழ் தாங்கி வரிப்பாட்டுப்பாடுகிருர்கள். அப்பொழுது, கோவலன் காவிரியைப்பற்றிப் புகழ்ந்து பாடுவதில், குறிப்பாற் றனக்குப் பிறமாதிடத்து அன்புள்ளதுபோற் காட்டினன்.இதையறிந்த மாதவி, ரஸிகையாதலால் அவனைக் கண்டிக்கவேண்டி வேடிக்கையாய்த் தான்பாடிய பாட்டிற் றனக்குப் பிறரிடத்துக் காதலுளதுபோற் காட்டினள். கேட்டிருந்த கோவலன் கோபித்து யாழைச் சுழற்றிக் கீழே யெறிந்துவிட்டு, மாதவி யென்ன ஆறுதல் சொல்லியுங்கேளாது சென்றுவிட்டான். அவர் பிரியுங்காலங் கிட்டியதன்றே? இவ்விடத்தில், நமது ஆசிரியர் ஓருலக வியற்கையைக் காட்டியிருக்கிரு ரென்று நமக்குத் தோன்றுகிறது. இதில், ஒரு புருஷனுக்கும், பெண்ணிற்குமுள்ள பேதத்தைக் காட்டுகிருர். புருஷர்கள் எப்பொழுதும் தங்கள் மனைவிகள் தம்மையே நேசிக்கவேண்டு மென்றும், பிற புருஷரை யெக்காரணத்தாலும் புகழக்கூடா தென்றும் விரும்புகிருர்கள். அவர்கள் எவ்வளவு உண்மையாயிருப்பினும், அவர்களைப் பொய்யர்களென்றும், உறுதியற்றவாக ளென்றும், சபல சித்தர்களென்றும் சந்தேகித்துக் குற்றஞ் சாட்டுகிறது வழக்கம். இப்பூமான்களோ தாங்கள் பிற மாதர்களிடத்துக் காதல்கொண்டு சென்ருல் மட்டும், பெண்கள் குற்றஞ் சாட்டக் கூடாதாம். தெரியாததுபோ லிருந்துவிடவேண்டுமாம். தெரிந்தும் பேசக்கூடாதாம். ஆனல், பெண்களோ, தமக்கு எப்பொழுதும் தம் கணவனன்பே வேண்டிய தென்றும், அது கிடையாவிடத்து வருந்தியும், கிடைத்தவிடத்துக் களித்தும் வருவார்களேயன்றித் தாம் தந்நிலைமையிற் றவருர். இதை நமதாசிரியர் கோவலன், கண்ணகி, மாதவி இவர்கள்பாற் காட்டியிருக்கின்றனர். மாதவி பாடியுள்ள வரிப்பாட்டுகள்அவளுடைய கானப் பயிற்சியையும், மனப் பயிற்சியையுங் காட்டுகின்றன. இக்காதை முழுமையும், அகப்பொருட்சுவை நிறைந்துள்ள பாடல்களாகவிருக்

கின்றது. இவிடத்தில், அற்பக் காரணத்தின்பொருட்டுக் கோவலன் மாதவியைவிட்டுப் பிரிந்திருப்பதாகக் காட்டியிருப்பதால், படிப்பவர்க்கு மாதவியிடத்துத் தாபமுண்டாகிறது. இஃதே, பொதுமகளி ரிடத்துச்செல்லும் பூமான்களின் தன்மை!

மாதவியிடத் துண்டாகும் தாபம் வேனிற்காதையி லதிகரிக்கிறது. இங்கு அவளனுப்பும் கடிதமானது அவளுடைய அறிவின் முதிர்ச்சியையும், வினயத்தையும், மனக்களங்க மின்மையையுங் காட்டுகிறது. இக்கடிதத்தைப்பெற்ற கோவலன் அதைப் பொய்யெனப் புறக்கணித்து விட்டான். இவிடத்தில், இளங்கோவடிகள் பொதுமக ளிருடைய சாகசச் செய்கைகளனைத்தையுங் கூறுகின்றார். கோவலன் கொடுமையைக்கேட்ட மாதவி படுந்துயரம் படிப்போர்மனதை யிளகச்செய்யும். இந்நிலையில் மாதவியை விட்டுவிட்டுக் கனலி சான்றாய்க்கைப்பிடித்த காரிகையாகிய கண்ணகியிடம் வந்துவிட்டான் கோவலன்.

இனிக் கனாத்திறமுரைத்த காதையில், கண்ணகி கண்ட கனவைக் கண்ணகி தேவந்தியினிடம் சொல்லுவதாகவும், சொல்லி முடிந்ததும் கனவிற்கேற்பக் கோவல னவளிடத்துச் சென்றதாகவுங் கூறியிருக்கிறார். இவிடத்தில் தேவந்தியின் வரலாறு தருகிறார். அதனால், அத்தேவந்தி கண்ணகிக்கு அன்னியளென்றும், அவள் கண்ணகியிடத்துத் தாபங்கொண்டது அவளுடைய பரிதபிக்கத் தகுந்த நிலையைக் கண்டென்றும் வெளியாகிறது. இத்தேவந்தி நூலாசிரியரின் சிருஷ்டி, தேவந்தியின் சரித்திரத்தால் தேவந்தியும் கண்ணகிபோலவே துக்க மனுபவித்தவளென்று தெரிகிறது. ஆதலின், அத்தகையாளைக் கண்ணகிக் காறுதல் சொல்லவிட்டது புகழற்பாலதே! பட்டவர்க்கன்றோ துன்பத்தின் கொடுமை தெரியும்? அவருக்கன்றோ ஆற்றுமாறும் நன்கு தெரியும்? அதனாலன்றோ,

> "பெற்றவட்கே தெரியுமந்த வருத்தம் பிள்ளை
> பெறாப் பேதை யறிவாளோ"

என்றார் தாயுமானவரும்?.

பிறகு, கோவலன் வந்ததும், வந்தவுடன் தன்னுடைய முந்திய செய்கைக்கிரங்கியதும், வாணிபம்நோக்கி மதுரைக்குச் செல்ல நினைத்ததும், கண்ணகியின் கனவு கேட்டார்க்குக் கவலையை யுண்டுபண்ணும். இதுவே, காப்பியமெழுதவோரின் தந்திரம். கோவலன் சொல்லக்கேட்ட கண்ணகி தன்னுடைய சிலம்புகளி லொன்றைவிற்று முதலாகக்கொண்டு வாணிபஞ் செய்யலாமென்று சொன்னாள். இங்கு, கோவலன் கண்ணகியை மதுரைக்கு வாவென்றழைத்தது மிகவும் கிராமியமா யிருக்கின்றது. இந்த விடத்தில் தன்னுடையநடத்தைக்கு வருந்தியதாகக் கோவலனைக்காட்டி, மதுரைக்குப் போவதாகக் குறிப்பாய்க்கூறச் செய்திருக்கலாம். கணவன் பிரியக்கேட்ட கண்ணகி

உன் நகைப்பெட்டியில் ஒரு காகிதத்துண்டு அகப்பட்டதன்றே? அஃது எங்கே இருக்கின்றது?" என்றான்.

**ஹிரண்மயி** - மஹாராஜா, தாங்கள் ஸர்வஜ்ஞரே யென்பதற்கு எட்டுணையும் சந்தேகமின்று. கடுதாசித்துண்டை வீட்டில் வைத்திருக்கின்றேன்.

**அரசன்** - நீ பல்லக்கில் மறுபடியும் வீட்டுக்குச்சென்று அந்தப் பாதி பத்திரத்தைக் கொண்டுவா. நீ வந்தால் சகல விருத்தாந்தமும் கூறுவேன்.

---

## பத்தாம் அத்தியாயம்.

ஹிரண்மயி அரசனது உத்திரவு பெற்று தன் வீட்டுக்கேகி முன்சொன்ன பத்திரப்பாதியை எடுத்துக்கொண்டு மறுபடியும் அரசன் சந்நிதிக்கு வந்தாள். அரசன் அப்பத்திரப் பாதியைப்பார்த்து பெட்டியினின்று மற்றொரு பாதியையும் எடுத்து ஹிரண்மயியின் கையிற்கொடுத்து, இரண்டையும் சேர்க்கச் சொன்னான். ஹிரண்மயி சேர்க்க, இரண்டு துண்டுகளும் ஒன்று சேர்ந்தன. இரண்டு துண்டுகளையும் சேர்த்துப் படிக்கும்படி அரசன் சொன்னவண்ணம் ஹிரண்மயி படித்தனள். எவ்வாறெனின் :—

"ஜாதகத்தைக் குணித்துப் பார்க்கையில் நீங்கள் யோசித்தவாறு நடத்தத்தகுந்த தன்று. (ஹிரண்மயி) யவ்வளவு சுவர்ண விக்கிரகத்தை வெகுகால கஷ்டத்திலிருத்துவது சரியன்று. அவளுக்கு விவாகமானால் பயங்கரமான விபத்து உண்டாய், உயிருள்ள வளவும் கஷ்ட மனுபவிப்பாளென்று குணித்ததில் ஏற்பட்டது. ஐந்து ஸம்வத்ஸரங்கள் வரையிலும் தம்பதிகள் முகத்தைப் பரஸ்பரம் தரிசனம் செய்யாதிருக்கும் பட்சத்தில் இந்தக் கிரஹதோஷத்தினின்று நிவிருத்தி உண்டாகும். அந்த ஏற்பாட்டை நான் செய்கின்றேன்."

படித்து முடிந்தபிறகு, அரசன், 'இந்தக் கடிதம் ஆநந்த ஸ்வாமிகள் உன் தந்தைக்கெழுதியது' என்றான்.

**ஹிரண்மயி**-அஃது இப்பொழுது ஏற்பட்டது, எதற்காக எனக்கு விவாக காலத்திற் கண்களைக் கட்டியிருந்தார்கள்; ஏன் இரகசியமாய் அவ்வற்புதக் கல்யாணம் நடந்தது; அஞ்சு வருஷங்களாகிறவரையில் மோதிரங்களை யணிந்து கொள்ளக்கூடாதென ஏன் நிஷேதிக்கப் பட்டிருந்தது என்னும் இவையெல்லாம் இப்பொழுது தெரிந்தன. மற்றொன்றும் தெரியாது.

**அரசன்**-காயிதம் வந்தவுடன் உனது பிதா உன்னைப்புரந்தரனுக்குக்கொடுத்துக்கல்யாணம் செய்யவேண்டுமென்று நிஷ்கரிஷைசெய்திருந்தது உனக்குத்தெரிந்தேயிருக்கின்ற தன்றே? புரந்தரன் அந்தத் துக்கத்தினாற் சிங்களத்தீ விற்குப்போயினான். அதுவும் தெரிந்திருக்கலாம்.

பிறகு ஆநந்தஸ்வாமிகள் வரனைத் தேடும்பொருட்டு வரனது ஜாதகத்தைப் பார்க்கையில், வரனுக்கு 75 வருஷத்துக் கதிகமாவே ஆயுள் இருக்கிறதென்று தெரியவந்தது. ஆனால் அவனுக்கு இருபத்தெட்டாம் வயதில் பெரிய கண்டம் இருந்தது. அவ்வளவேயன்றி அவ்விருபத்தெட்டு வயதுக்குமுன், கல்யாணமான அஞ்சுவருஷங்களுக்குள் மனைவியின் படுக்கையில் படுத்தால் அவனுக்கு மரணம் உண்டாகுமென்றும், அது தீர்ந்துபோனால் நீண்ட ஆயுளுள்ளவனா யிருப்பானென்றும் தெரியவந்தது.

ஆகையினால் வரனுக்கு இருபத்து மூன்று வயதானபிறகு விவாகம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால் அதுகாறும் உனக்குக் கலியாணம் ஆகாமலிருந்தால், உன்மனது சஞ்சலிக்கு மென்றும், மேலும் இரகசியமாய் வேறே விவாகம் செய்துகொள்ளாமல் இருக்கவேண்டு மென்றும், உனக்குப் பயம் இருக்கவேண்டு மென்றும், இந்தப் பத்திரப்பாதி உன் நகைகளுடன் வைக்கப்பட்டது.

அதுவுமன்றி, விவாகமான ஐந்து வருஷம் வரையிலும் பரஸ்பரம் பார்க்காமலிருப்பதற்குத் தகுந்த உபாயத்தை யேற்படுத்தியது உனக்கே தெரிந்திருக்கின்றது. ஆகையால் புருஷனுக்கும் மனைவிக்கும் பரஸ்பரம் பரிச்சயம் உண்டாகவில்லை.

ஆனால் இப்பொழுது ஐந்தாறு மாதங்களாய்ச் சிறிது 'தடபுடல்' ஆயிற்று. ஆநந்த ஸ்வாமிகள் இங்கேவந்தார். நீ வறுமையால் வருந்துவதைக் கேட்டுச் சாலவும் துக்கித்தார். அவர் உன்னைப் பார்க்கவந்தார். ஆனால் உன்னைப் பார்க்கவில்லை. அவர் வந்து என்னைப்பார்த்து உன் விவாக விர்த்தாந்தத்தை ஆமூலாக்கிரம் சொல்லி, "ஹிரண்மயி வறுமை நிலைமையில் இருந்தது எனக்குத் தெரிந்திருந்தால், அதற்கேதேனும் நல்லுபாயம் செய்திருப்பேன். தங்கள் இவ்விஷயத்தில் ஏதாவது உபகரித்தால் அதை மிகவும் பெரியதாய் மதிப்பேன், ஹிரண்மயியும் அவள் கணவனும் ஒருவருக்கொருவர் பாராமலிருக்கும் வண்ணம் செய்யவேண்டும்" என்று சொல்லியதன்றி உன்பர்த்தாவின் பரிசயத்தையுங்கூடச்சொன்னார். அதுமுதல், அமலை உன் வீட்டுக்காரியங்களைப் பார்க்கும்படி நானே ஏற்பாடு செய்தேன். உன் பிதாவின்வீட்டை நானே கிரயத்துக்குவாங்கி நீ வசிக்கும்பொருட்டு விட்டேன். வஜ்ஜிரஹாரத்தை நானே உன்னிடம் அனுப்பினேன். அவ்வாறு செய்தது உன்னைப் பரீக்ஷிக்கும் பொருட்டு.

ஹிரண்மயி-அப்படியாயின், தங்களுக்கு இம்மோதிரம் எங்கேகிடைத்தது. ஏன் தாங்களே என்பதி யென்றுகூறி மோசம் செய்தீர்கள்? புரந்தரனது வீட்டில் 'ரொக்கம்' கொடாமல் வசிப்பது சரியன்றென ஏன் ஆக்ஷேபனை செய்யப்பட்டது?

அரசன்-ஆனந்த ஸ்வாமிகள்வந்து எனக்கு இந்த விருத்தாந்தமெல்லாம் சொன்ன வுடனே உன்னேச்சுற்றிக் காவலிருப்பதற்கு ஜனங்களை யேற்படுத்தினேன். அந்தத்தினமே, அமலையின் வசம் ஹாரத்தை யுன்னிடம் அனுப்பினேன். இன்று ஐந்து வருஷங்கள் நிறைகின்றபடியால் உன் தலைவனை வரவழைத்து, அவருக்கு விவாக விருத்தாந்தம் முழுமையும் சொல்லி, இரவு பதினொருமணிக்குச் சரியாய் மோதிரத்தைக் கொண்டுவந்து வைத்திருந்தால் மனைவியுடன் சேரலாமென்று சொல்லியதற்கு, அவர் சம்சாரத்தில் சேர்ந்திருக்கத்தனக்கிஷ்டமில்லையென்றும், ஏகாங்கியா யிருப்பதாயும் சொன்னார். 'அதுசரியன்று. என் உத்திரவு, பிரகாரம் நடந்துக்கொள்ள வேண்டும்' என நான் சொல்லியதன்மேல் அவர் ஒப்புக்கொண்டார். ஆனால் அப்பெண் நல்லொழுக்க முள்ளவளோ, தீய வொழுக்கமுள்ளவளோ என்பதை நன்றாய் விசாரிக்கவேண்டும். கெட்டவொழுக்க முள்ளவளெனத் தெரிந்து என்னுடன் அவளைச் சேர்த்தால் தங்களுக்குப் பாப ஸ்பரிசம் உண்டாம் என்று சொன்னார் அதற்கு நான், 'மோதிரத்தைக் கொடுத்து விட்டுப்போம். அவள் ஒழுக்கத்தைப் பரீக்ஷித்துச் சொல்கின்றேன்' என்றேன். அவர் மோதிரத்தை ஒருவர் கையிலும் நம்பிக்கொடுப்பவ ரல்லர். ஆனால் என்னைநம்பிக் கொடுப்பதாய்ச் சொல்லி அதனைக் கொடுத்தார். நான் மோதிரத்தை வைத்துக்கொண்டு சோதித்ததில் நீ கெலித்தாய்.

ஹிரண்மயி-தாங்கள் எந்தப் பரிக்ஷையை எப்படி நடத்தினீர்களோ? நான் எப்படி ஜயித்தேனே? எனக்கு விளங்கவில்லை.

இவ்வாறு சொல்லிக்கொண்டிருக்கையில் மங்கள சூசகமாய் வாத்தியங்கள் முழங்க வாரம்பித்தன.

அரசன்-'இரவு பதினொரு மணியாயிற்று; பரீக்ஷை விசாரத்தைப் பிறகு சொல்லுகின்றேன். இப்பொழுது உன்பதி வந்திருக்கின்றார். சுபலக்னத்தில் பரஸ்பரம் சுபதிருஷ்டி உண்டாகட்டும்' என்றான்.

அப்பொழுது பின் பக்கத்திலிருந்த கதவு திறக்கப்பட்டது. நீண்ட வுருவமைந்த புருஷனொருவன் அவ்வாயிலின் வழியாய் அவ்வீட்டினுள்வந்து நின்றான்.

அரசன் - ஹிரண்மயி, இவரே உன்நாயகன்.

ஹிரண்மயி பார்த்தாள். அவளுக்கொன்றும் தோன்றவில்லை. ஜாக்கிரா வஸ்தைக்கும் சொப்பனவஸ்தைக்கும் உள்ள வேற்றுமை அறியாது மயங்கினாள். பார்க்கவே புரந்தரன்!

இருவரும் ஒருவரை யொருவர்பார்த்துத் தூண்போல் அசைவற்று அறிவழிந்து நின்றனர். பரஸ்பரம் தங்களைத் தாங்களே நம்பாதிருந்தனர்.

அரசன் புரந்தரனைநோக்கி, 'நண்பனே, ஹிரண்மயி உனக்குத் தகுந்த மனைவியாகையால் வீட்டுக்கழைத்துக் கொண்டுபோ. இவள் இப்பொழுதும்

முன்போலவே உன்னிடத்தில் அன்புள்ளவளாகிருள். நான் இவளை அல்லும் பகலும் காவல்வைத்தும் பார்த்திருக்கின்றமையால் இவள் வேறொருவரிடத்திலும் காதலுள்ளவ ளல்லளென்றும் தெரிந்துகொண்டேன். உன் இஷ்டப்பிரகாரம் அவளைப் பலவிதத்திலும் சோதித்துப்பார்த்தேன். நானே அவளுடைய நாயகனென்று சொன்னேன். ஆனல் அவள் ராஜ்ய ஆசையினாற்கூட உன்னை மறக்கவில்லை. அவள் உன்னிடத்திலேயே ஆழ்ந்த காதலுடையளா யிருக்கின்ருள். சந்தேகங் கொண்டவன்போற் சில வார்த்தைகளைச் சொன்னேன். அவற்றிற் கவள் துக்கமுற்று, 'நான் நிர்த்தோஷி, என்னைக் கிரஹிக்கவேண்டு' மென்று சொல்லியிருந்தால் உன்னை யவள் முற்றும் மறந்தாள் எனக் கூறுவேன்; ஆனல் ஹிரண்மயி அவ்வாறு உரையாது, 'மகாராஜா, நான் அஸதி, என்னைத் தள்ளிவிடுங்கள்' என் றுரைத்தாளெனச் சொல்லி, பிறகு ஹிரண்மயியைப்பார்த்து, 'ஹிரண்மயி, உன்னுடைய மனோபாவங்களை யெல்லாம் நன்ருய் அறிந்து கொண்டேன். நீ 'அந்நியபதியின் சேர்க்கை செய்யக்கூடாதென்றும் நான் அஸதி யென்றும்' சொன்னுய். நீங்களிருவரும் சுகமாயிருக்க வேண்டுமென்று நான் ஆசீர்வாதம் செய்கின்றே னென்ருன்.

**ஹிரண்மயி**-மகாராஜா, எனக்கு இன்னொரு சங்கதி சொல்லவேண்டும். இவர் சிங்களத் தீவில் இருந்தார். காசியில் எனக்கு மிவருக்கும் திருமணம் ஆனதெவ்வாறு? அவர் சிங்களத்தினின்று காசிக்கு வந்திருந்தபட்சத்தில் எங்களுக்கேன் தெரியாமற் போயிற்று?

**அரசன்** - ஆநந்த ஸ்வாமிகளும் புரந்தரனுடைய பிதாவும் ஒன்ருய் ஆலோசித்துக் கொண்டு ஜனங்களை யனுப்ப, அவர்கள் இவரைச் சிங்களத்தினின்று காசிக்கு அழைத்துக்கொண்டு வந்திருந்தார்கள். விவாகமானவுடனே மறுபடியும் சிங்களத்திற்குப் புறப்பட்டுப் போனுர். பிறகு இந்த நகரத்துக்கு வரவில்லை. ஆகையால் உங்களொருவருக்கும் தெரியவில்லை.

**புரந்தரன்** - மகாராஜா தாங்கள் எப்படி எங்களுடைய வெகுகால மனோரதத்தை ஈடேற்றினீர்களோ அப்படியே ஜகதீசுவரனும் தங்களுடைய மனோரதங்களையும் பூர்ணம் செய்வாராக. இன்று நாங்கள் எங்ஙனம் சுகமடைந்தோமோ, அத்தகைய சுகசாலிகள் தங்கள் இராஜ்யத்தில் இதற்கு முன் எப்பொழுதும் இருந்ததில்லை.

முற்றிற்று.

தி. அ. ஸ்வாமிநாத ஐயர்.

---

# ஆசார விளக்கம்.

## இலக்கண வதிகாரம்.

### சூத்திரம். 5

### ஒல்லும் நடை. *

பொதுவில் உடலுயிர் உறுதியடைந்து வாழ்தற் கத்தியாவசியகமாயும், மற்றையர் துன்பத்துக் கேதுவல்லாததும், தனக்கின்பந் தருவதும், ஒள்ளியதும், தெள்ளிய நூல் யுக்தி யநுபவங்களாற் சிறந்த தென்று தீர்மானிக்கப்பட்டதாயும், விரும்பத்தக்கதாயும் இருக்கினும், மண்வெட்டல் சுமத்தல் இரும்படித்தல் மரம் வெட்டல் முதலிய கடின வேலை செய்கின்ற கூலியாட்களுக்கு மிகுத்த சத்துள்ள கம்பு, கேப்பை, அன்னம் ரொட்டிகளும் கோதுமை முறட்டு ரொட்டிகளும் மந்த மாமிசங்களும் ஜீரணித்துப் பலந்தருந் தன்மையுள்ளனவாம். கடின வேலையின்றி நிழலிற் சுகவாசியாயிருப்பவர்க்கு அவை அஜீரணம் பொருமல் வயிற்றுப்போக்கு முதலிய துன்பங்களைத்தரும். மிருது சரீரிகளாகிய சுகவாசிகளுக்குச் சீரணித்துப் பலந்தருஞ் சிறு அரிசிச்சாதம் இரசம் குழம்பு முதலியன. கடின வேலை செய்யும் கூலியாட்களுக்கு வயிற்றை நிரப்பினும் அவர்கட்குரிய வேலைகளைச்செய்யப் போதுமான பலந்தருந்தன்மைத்தனவாகா. ஒரு தன்மைத்தாம் தொழில் புரிவாருள்ளும் சிலர்க்கேற்கு மாகாரத்தினளவு வேறு சிலர்க் கேற்காது. சுகவாசிகளுக்குச் சீரணமாய்ப் பலந்தருமிலேசாகாரமும் மெலிந்த அல்லது ரோகசரீரிகளுக்குச் சீரணமாய்ப் பலந்தராது. சிலர்க்கு நெய்யதிக அளவுஞ் சுகம் பலந்தருகின்றது. சிலர்க்குக் குறைந்த அளவு அசீரணம் வயிற்றுப்போக்குகளை யுண்டு பண்ணுகின்றது. தயிர் சிலர்க்கு கூதிர்ப்பருவம் கார்ப்பருவங்களில் வாதரோகத்தை யுண்டுபண்ணுகின்றது. சிலர்க்குச் சுகந்தருகின்றது. பகலிற் புசிக்கச் சீரணிக்கும் பலத்தவாகாரஞ் சிலர்க்கு இரவிற் சீரணிப்ப தின்று. சிலர்க்கு இரவிற் சீரணிப்பது பகலிற் சீரணிப்பதின்று. விடியற்காலக் குளிர்ந்த ஜலஸ்நாநம் பலர்க்குத் தேகசுகந் தருகின்றது. சிலர்க்கதுவே சுகவீனத்தை விளைவிக்கின்றது. சிலர்க்குக் கடின வேலையும் சிலர்க்குச் சுலபவேலையும் சிலர்க்கு மனோமுயற்சியும் சிலர்க்குத் தேகமனோ முயற்சிகளிரண்டும் ஏற்கின்றன. சிலர்க்கு முயற்சியொன்று மேற்பதின்று. மிகுந்த காற்றுச் சிலர்க்குச் சுகமும் பலர்க்குச் சுகஹீனமுந் தருகின்றது. உஷ்ணதேசத்தி லாரோக்கியந் தரும் ஊண் நடை உடைகள் குளிர்ந்த தேசத்தில் தீங்கு விளைக்கின்றன. குளிர்ந்தே

* "What is one man's meat may be another man's poison; and those only are wise who, in seeking to conform to what they believe to be the general laws of health concern themselves with the principles, rather than the practice, laid down for their guidauce." (How to Make the Best of Life. by J. Motimer Granville. M. D.)

யத் தாரோக்கியம் தரும் ஊண், நடை, உடைகள் உஷ்ணதேயத்திற் றீங்கு விளைக்கின்றன. இங்ஙனமுள்ள மாறுபாடுகளநந்தம்.

ஒருவர் சரீரத்துக்குப் பொருந்திய சுசி ஊண் முதலியன மற்றையர்க் கங்ஙனம் வேறுபாடுறலநுபவத்துக் கண் கூடாகக்காண்டலின், அவ்வவர் தேயம் நிலைமை தேகம் பலம் தொழில் பழக்கங்கங்களுக்கும் காலத்துக்குந் தக்கபடி பொருந்து மாசாரத்தையேயநுஷ்டிக்கத்தக்கது என்பதை வற்புறுத்தியுணர்த்தும் பொருட்டு ஒல்லும் என்ற விசேடமும் அவசியமாயதோர்க. இத்தகைய வேறுபாடுகளை ஆங்காங்குத் தெளிவுற விளக்குதும்.

## காட்டு.

தைத்திரீயோபநிஷத், சிக்ஷாவல்லி 6-வது அநுவாகம்.

யாந்யநவத்யாநி கர்மாணி தாநி ஸேவிதவ்யாநி நோ இதராணி । யாந்யஸ்மாகꣳ ஸுசரிதாநி தாநி த்வயோபாஸ்யாநி நோ இதராணி ॥

(இ-ள்) எந்தக் காரியங்கள் நிந்திக்கப்படத் தக்கவைகளல்லவோ அந்தக் காரியங்கள் அநுஷ்டிக்கப்படத் தக்கவைகள். வேறு காரியங்களன்று.

எங்களுடைய நல்லொழுக்கங்கள் உங்களா லநுட்டிக்கப்படத்தக்கவை, மற்றவை யநுட்டிக்கப்படத் தக்கவை யன்று.

மநுதரும சாத்திரம் அத். 2. சு. 6.

வேதோऽகிலோ தர்மமூலம் ஸ்ம்ருதிஶீலே ச தத்விதாம் ।
ஆசாரஶ்சைவ ஸாதூநாமாத்மநஸ்துஷ்டிரேவ ச ॥

(இ-ள்) இருக்கு முதலிய நான்கு வேதங்களும், இந்த வேத மறிந்த இருடிகளின் ஸ்மிருதியும், அவர்களின் அநுஷ்டானமும், சாதுக்களின் ஒழுக்கமும், தன்தன் மனதின் சந்தோஷமும், தருமத்துக்குக் காரணமாக விருக்கின்றன.

இவ்வெண்வகை யிலக்கணத்துள் ளாசாரங்களடங்குமாறு.

(1) உடலுறுதியெய்தி யுய்தற்கின்றி யமையா வொழுக்கம் எனவே நாண்முறைத்தூய்மை, உடற்றூய்மை, உடைத்தூய்மை, பயிலிடத்தூய்மை, நல்லாகாரம், நல்வாயுச் சுவாசித்தல், தொழிற்றூய்மை, சுசியினர் புணர்ப்பு தேகமுயற்சி முதலியனவும்.

(2) உயிர் உறுதி யெய்தியுய்தற் கின்றியமையா வொழுக்கம் எனவே உடலுறுதி யெய்தியு ய்தற்குரைத்த வொழுக்கங்கள், கள்ளுண்ணாமை கவலாமை கோபமின்மை அழுக்காறுமை முதலியனவும்.

(3) இடுக்கண் காணு வொழுக்கம். (அந்நியர்க்கு) எனவே கள்ளாமை இன்சொல் கொல்லாமை இன்னாமை அன்புடைமை அருளுடைமை கண்ணோட்டம் முதலியனவும்.

(4) இன்பிகை யொழுக்கம் (தனக்கு) எனவே, அகமின்மை பொறை யுடைமை கவலாமை அவாவின்மை அறிவுடைமை திருப்தி முதலியனவும்.

(5) எண்ணூலூ சமநுபவந்த மாவலமையு மெனத்தேர் ஒழுக்கம் எனவே சுசி நெறி புறங்கூறாமை ஒழுக்க முடைமை நன்றியறிதல் நல்லோர் நட்பு சிற்றினஞ்சேராமை முதலியனவும்.

(6) விரும்பத்தக்க ஒழுக்கம் எனவே நல்லாகார முதலியன ஒண்மைக் கல்வி முதலியனவும்.

(7) ஒள்ளிய வொழுக்கம் எனவே நடுவுநிலை புண்ணிய விருப்பம் தீவினையச்சம் முதலியனவும்.

(8) **ஒல்லும் ஒழுக்கம்** எனவே மிதாகாரம் மிதபோசம் மிதமுயற்சி மிதவொண்மை முதலியனவும் கொள்ளக்கிடந்தமை காண்க.

இனி எண் வகையிலக்கணங்களு மோராசாரத்துக் குளதாதலெங்ஙன மெனில் உதாரணமாக) (1) வைகரைச்குளிப்பு சோர்வு உஷ்ணங்களைப் போக்கி உடலுக்குப் பலமுஞ் சுறுசுறுப்புந்தரும், (2) மனதுக்குப் பலத்தையும் தெளிவையுந்தரும், (3) அர்கியர் துன்பத்துக் கேதுவன்று, (4) தனக்காரோக்கிய வின்பந்தரும், (5) நூலால் ஊகத்தால் அநுபவத்தால் ஆரோக்கியந் தரத்தக்க தென்று தீர்மானிக்கப்பட்டது, (6) விரும்பத்தக்க நற்றோற்றத்தையும் அழகையுந்தரும், (7) அறிஞராலனு சரிக்கப்படு மேன்மையது, (8) அநுசரிப்போர் சரீர நிலைமைக்கேற்றவாறு புரியிலித்துணை நன்மைகளைப் பயக்கும் என்க.

இங்ஙனம் ஆசாரங்களனைத்துக்கு மிவ்விலக்கணங்களைப் பொருத்திக் காண்க.

விருதை - சிவஞானயோகி.

---

## இராமாநுஜாசாரியர் சரிதம்.

இங்கு இவரிவ்வாறிருக்க அங்கு யாதவப்பிரகாசரும் அவர்தம் மாணாக்கரும் குழாங்கூடி நிற்கையில் கோவிந்தப்பட்டர் இளையாழ்வாரின்றித் தாம் தனியே செல்ல அவர்கள் அக்கோவிந்த பட்டரை நோக்கி 'வந்தீரோ.' இளையாழ்வா ரெங்கே ? என்றுவினவக் கோவிந்த பட்டர் அவரைக் கண்டிலேன்' என்றனர். அப்பால் யாதவப் பிரகாசர் தம் மருகிலுள்ளாரைத் தேடுமாறு கட்டளையிட அவர்களுமங்ஙனமே தேடியுங் காணமையால் ' ஆ! ஐயோ!! அவருக்கு எத்தகைய தீங்கு நேர்ந்ததோ ? என்று யாவரும் மனக் கலக்க முடையராய்ப் பின்பு தாம் கருதி வந்த கங்கா யாத்திரையை நிறைவேற்றக் கருதி விரைவொடு சென்று கங்கைக்கரை யடைந்தனர். அங்ஙனம் போன அவர்களனைவரும் கங்கையில் நீராடா நிற்க, ஒரு நாள் கோவிந்

தபட்டரும் * அகமர்ஷண ஸ்நானம் பண்ணும்போது, ஒருலிங்கம் தம தருகே, வந்து சேர இஃதென்! என்று வியப்புற்று யாதவப் பிரகாசருக்குக் காட்ட, அவரும் மிக்க அன்புடையராய் அக்கோவிந்தபட்டரை நோக்கி 'நீ விர்தெய்வபக்தி பெரிது முடையரோதலின் கங்காஸ்நானபயன்கைபுகுந்தாற் போலச் சங்காதரனே நுங்கைப் புகுந்தான்' என்று இவர் மாட்டுப் பெரும் பக்தி செய்து நிற்க, மற்றுயாவரும் 'லிங்கங்கைச் சேர்ந்த காரணத்தா லிவர்க்கு 'உள்ளங்கை கொணர்ந்த நயினர்' எனப் பெயரிட்டழைக்கத் தொடங்கினர்கள். யாதப் பிரகாசரும் கங்கா ஸ்நானம் பண்ணிமீண்டு ஜகந் நாதம், அகோபிலம் என்ற ஸ்தலம் வழியாக வர உள்ளங்கை கொணர்ந்த நயினரும், 'இந்த லிங்கத்தைத் தக்க தொரு இடத்திற் பிரதிஷ்டை செய்து வருகின்றேன்' என்று கூற அவ் யாதவப் பிரகாசரும் 'அவ்வாறே செய்யும்' என்று இவரை வழி நடுவே யனுப்பி விட்டுப் பெருமாள் கோயிலை நோக்கிப் போந்தார்.

பின்பு, உள்ளங்கை கொணர்ந்த நயனரும் தம்பிறப்பிடமான மழலைமங்கலஞ் சென்று ஆங்குள்ள புலவர்திலகர் யாவரையு மொருங்கு திரட்டித் தன் கையகத்தேயுள்ள இலிங்கத்தைப் பிரதிட்டைசெய்து அதனிடத்தே பத்திகொண்டு வாழுமளவில், காளத்தி நாதன் இவரது நிலைமையைப் பெரிது முவந்து 'நீர் நம்பக்கல் வந்திருப்பீராக' என்றிவர்க்குச் சொப்பனமளித்து அங்ஙனமே, தன்னருகிலுள்ளார்க்கும் 'நீங்கள் உள்ளங்கை நயினரையழைத்து வாருங்கள்' எனக்கட்டளையிட அவ்வாறே அவர்கள் யாவரும் மழலைமங்கலஞ்சென்று 'உள்ளங்கை நயினர்' என்னுங் கோவிந்த பட்டரைப் பல்வகையாய்ச் சிறப்பித்து அழைத்துப்போய், அந்நிலைக்குரிய இலச்சினை யீந்து இவரைத் தமக்கு முக்கியராக்க, இவரும் அப்படியே யமர்ந்திருந்தார்.

பின், யாதவப்பிரகாசரும் பெருமாள் கோயிலை யடைந்து இளையாழ்வாரைக்கண்டு ஆச்சரியங்கொண்டு அவரை நோக்கி, நீர் சிறுநீர் கழித்து வரச் சென்றபின்னர்க் காணப்பெறுமையால் மனத்தளர்ச்சி யுற்று வருந்தா நின்றோம்.' இவ்வளவும் உம்மைக்கண்டதே! என்ன, இவரும் தாம் வழிதப்பியலைந்ததையும், அப்பா லொரு வில்லிகாரணமாப் போந்ததையும் விவரமாய்க் கூறக்கேட்டு இவரது பெருமைக்கு வியந்து அவர்பால் உள்ளங்கலந்து மிக்க அன்புடையராய்க் கோட்டிக்கண் கூட்டிக்கொண்டு வேதாந்தம் படிப்பிக்கத் தொடங்கினர்.

இவ்வளவில் இரண்டு வைணவர்கள் பேரருளான் கோயிற்கணின்றும் நம்பெருமாளைச் சேவிக்க வெழுந்தருளி அப்பெருமானைத் திருவடி தொழுது, ஆங்கெழுந்தருளியிருந்த 'யமுனைத் துறைவர்' என்ற ஸ்ரீ ஆளவந்தாரையும் வழிபட்டு நிற்க, அவரும் 'இவ்வைணவர்களை நோக்கிப்பெருமாள் கோயில்

* அகமர்ஷண ஸ்நானமாவது—பாபத்தைப் போக்கவல்லதொரு இருக்கையுச்சரித்துக்கொண்டு செய்யும் ஸ்நானம் என்பர்,

விசேடங் கேட்டருள்கையில் வைணவர்கள் கீழ்நிகழ்ந்த விருத்தாந்த மனைத்தையும் கூறினார்கள். அதுகேட்ட யமுனைத்துறைவரும், இந்தளத்திற்றாமரை பூத்தாற்போல இவ்விபூதியின்கண் இப்படியு மொரு பரம்புருடரிருக்கப் பெற்றதே! எனக் களிகூர்ந்து அவ்விளையாழ்வாரைக் காணவிரும்பித் தம்முடைய மாணாக்கருடன் புறப்படப் பெரியபெருமாளிடம் விடைபெற்றுப் போந்து திருக்கோவலூர் வழியே வருகையில் அவண் வீற்றிருந்த ஆழ்வார்கள் நயினாரையுந் திருவடிதொழுது அப்பால், நகர்களுள் தலைமையாகவைத் தெண்ணப்படும் காஞ்சிமா நகரத்தெழுந்தருள, ஆங்குள்ள வைணவர்களும் வரந்தரும் பெருமாளரையரும், ஸ்ரீ சடகோபரும், அதிக கோலாகலத்துடன் எதிர்கொள்ள வரவே, ஸ்ரீ ஆளவந்தார் ஆனந்தப்பெருக்கிலமிழ்ந்து சாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து அவர் கொணர்ந்த தீர்த்தப் பிரஸாதங்களை யங்கீகரித்து நின்றார். அப்பொழுது **திருக்கச்சி நம்பி**களும் பேருவகையோடு அவர் தம் திருவடிகளில் அடைவு கெடவீழ்ந்து வணங்க, யமுனைத்துறைவரும் அவரை முடிபிடித்தெடுத்து, 'கஜேந்திரதாஸரே! பேரருளாளர்க்குத் திருவாலவட்டக் கைங்கரியம் நடந்து வருகின்றதா'? என்ன, அவரும் வாய்புதைத்துத் தேவரீரது கிருபா விசேடத்தாற் பேரருளாளர் கொண்டருள்கின்றார் என்றனர். பின்பு, ஆளவந்தார் திருக்கச்சி நம்பியையுங் கூட்டிக்கொண்டு * "உலகேத்து மாழியானத்தியூரான்" என்ற பேரருளாளரைச் சேவிப்பான் புக்கு, முதற்கண் பேரருளார் பெருந்தேவியாரை நமஸ்கரித்து மீண்டு பிரதக்ஷிணமாய் வருகையில் ஆங்கொரு புற்றினருகே † திருவனந் தாழ்வானையுஞ் சேவித்து அதனருகே கரியமாணிக்கத் தாழ்வாரையும் வணங்கி யெழுந்தருளுங்கால், யாதவப்பிரகாசரும் அவர்தம் மாணாக்கர் குழாமுமாகப் பெருமாளைச் சேவித்து வலங்கொண்டு வாராநிற்க, அதுகண்ட ஸ்ரீயாளவந்தாரும் தம்பக்கலுள்ள நம்பியைநோக்கி 'இக்குழாத்துள் இளையாழ்வார் யார்'? என்னவே அவரும், 'சிவந்து நெடிய வலியுடையராய் ஆஜானுபாகுவாய் நடுவே வருகின்றவர்' என்று விண்ணப்பஞ் செய்தனர். ஆளவந்தாரும் அவரைக் களிப்புடன் தமது திருக்கண் மலர்களால் நோக்கி 'ஆ! முதல்வனிவனே' என்று அவரைச் செவ்வனே கடைக்கணித் தருளிப்பின், பெருமாளை நோக்கி 'நீர் ‡ "தாம் வேண்டுங்காமமே காட்டுங் கடிது" என்றவாறு அவரவர் விருப்பத்தை யளித்திடு மருளாழியரோதலின் அடியேனுக்கு இவ்விளையாழ்வாராகிய மகான் நம்சமயப் பிரவர்த்தகராமாறு அருளவேண்டும்; || "அடைக்கலம் புகுந்த வென்னை யஞ்ச லென்னவேண்டும்" என விண்ணப்பஞ்செய்து பிறகு அத்திகிரியின்மீ தெழுந்தருளிய மலைநாதபிரானடி பணிந்து, திருக்கச்சி நம்பியைப் பேரரு

* இயற்பா—இரண்டாம் திருவந்தாதி. † திருவனந்தாழ்வான்—(திருமாற்குப் பாயலாகும்) ஆதிசேஷன். ‡ இயற்பா—இரண்டாம் திருவந்தாதி. || திருச்சந்த விருத்தம்.

ளாளரது கோயிற்கண்ணே நிறுத்தி, ஆளவந்தார் அத்தருணத்தில் இளையாழ்வார்க் கொருநல்ல வார்த்தை சொல்லப்போந்த வமயங்காணப் பெருமையாலே மீண்டு, தாமும் தம்முதலிகளுமாகத் திருவரங்கம்பெரிய கோயிற்கணெழுந்தருளினர்.

இதன்பின், யாதவப்பிரகாசரும் தம்மாணுக்கர்களுடன் வேதாந்தமாராய்ந்து கொண்டிருக்குங்கால் அந்நாட்டரயன் மகளையொரு பிரமராக்கதன்பற்ற அரசன் இங்கு மந்திரம் வல்லாரெவரேனுமுண்டோ? என்றாராய்ந்து நிற்கையில் யாதவப்பிரகாசரே சிறந்த மந்திரவாதியா மெனக்கேள்வியுற்று அவர் பாற்றூதனுப்ப அத்தூதுவன் வந்து அரசனதாணை கூறக்கேட்டு, தூதுவனை நோக்கி, 'நீவிர் அப்பிரமராக்கதனுக்கு, யாம், போமாறு கட்டளையிட்டோம் எனச்சொன்மின்' என, அவ்வாறே சொன்னார்கள். அது கேட்ட ராக்கதன் 'யாம் அவனை யங்கினின்று மகன்றுபோகச் சொன்னதாகச்சொன்மின்' என்றிறுமாப்புட னுரைக்கக் கண்ட தூதுவர்கள் அதனை யாதவப் பிரகாசருக் கறிவிக்க அவரும் கடுஞ்சீற்றங்கொண்டு தாமும் தம்திரளுமாகச்சென்று அரசனவைக்கண் ஒருமாமந்திரத்தைத் தனது நாவிடையே வழுத்திக்கொண்டு இராக்கதனருகே நின்று முட்டிபிடிக்க அதுவும் தன்காலை நீட்டி 'வாடா ! யாதவப்பிரகாசா ! நீ ஜபிக்குமந்திரத்தை யானன் கறிவல்' என, வதனைச்சொல்லி, யானிம்மந்திரத்திற்கும் நினக்கும் அகல்வேனோ? நீ நினது பிறப்புமறியாய்; எனது பிறவியு மறியாய் என்ன யாதவப்பிரகாசர் அற்றேல், நீ முற்றுங்கற்ற பிரானேயாவாய், எனது பிறப்பென்? அங்ஙனே நின் பிறப்புமென்? அறைதி' என்னவே அதுவும் அவனை நோக்கி நீ மதுராந்தகத்து ஏரி கரையின்கணொருபுற்றி லுடும்பாயிருந்தனை ! ஒரு கால் கோயிற் பெருங்கூட்டம் வடதிருவேங்கடஞ் செல்லா நிற்புழி ஆங்கு வைணவர்கள் நீராடி யமுது செய்தவிடத்துச் சிந்திய வடிசிலையுண்டவளவில் இப்புலமைவாய்ந்த மானுடப்பிறவியெய்தினாய். யானோ பார்ப்பனச்சாதியிற் பிறந்து வேள்வியியற்றினேன், அதில் மந்திரவோமம் முதலிய நேர்ந்தமையாலெனக்கிப்பிறவி வாய்த்தது என்றது. ஆயின் நீயார் மந்திரத்தைக்கண்டஞ்சுவை என உன்பக்கல் வேதாந்தம் பயின்று வருபவர்களுள் நித்திய சூரிகட்குத் தலைவராயிருப்பர் காணொருவர், என்ன யாதவப்பிரகாசரும் அவரை இன்னாரெனச் சுட்டுக்காட்டுதி என்றனர். உடனே பிரமராக்கதன் இளையாழ்வாரைக் காட்டி 'இவர் யான்,போமாறு கட்டளையிடுவாராயின் அக்கணமே போவேன்' என, அவரைநோக்கி, இளையாழ்வாரே ! நீர் இதனைப்போகச்சொல்லு மென்ற வளவில் அவரும் அவ்வாறே சொல்லியருளினர். அதுவும் "நும் திருவடித்தாமரைகளை என் தலைக்கணியாய்ச் சூட்டினா லன்றிப்பேகோன்" என்றவத் தருணத் திளையாழ்வாரும் அதன் வேண்டுகோட் கிணங்கினர். (இன்னும் வரும்)

தி. கோ. ஸ்ரீரங்காசாரியன்.

# வாழ்க்கைப் பயன்.

## III. பணவிஷயம்.

(சம்புடம் III. 466-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

'கடவுள் ஒரு தீர்க்க தரிசியை யாட்டு மந்தைகளிலிருந்தன்றி வேறெவ்விடத்தினின்றும் எடுக்கமாட்டார்' என்று மஹமநு கூறியபடி கூருவிடினும் எத்துணைப்பெரியோர் வறியோராயிருந் திருக்கின்றனர் என்பது உண்மையாகவே ஆச்சரியகரமானது. பணம் நமக்குச் செய்யக்கூடியதை யுயர்வுநவிற்சி யாகக் கூறுவதொரு சாதாரணமான பிழை. அஃதுணவு விஷயத்திலேயோ?

செல்வனொருவன் சௌக்கியவானாக வேண்டில் அவன் ஏழைபோல் வாழற்பாலன். காலையுண்டிக்குத் தேயிலைக் கஷாயத்தோடாதல் காப்பிக் கஷாயத்தோடாதல் ரொட்டியையும் வெண்ணெயையும் வேண்டுமாகிற் சிறிது தேனையாதல் சேர்த்துக்கொண்டு உண்பதனினுஞ் சிறந்ததென்னுளது? இரண்டாம் வேளைக்குரொட்டியும் பாற்கட்டியுந்தவிரச் சிறந்தன வேறென்ன இருக்கின்றன, நன்குகச் சமைக்கப்பட்ட சாதாரண வுண்டியும் நமக்குப்பசியும் இருந்தால் ஒரு பட்டணத்ததிகாரியின் வீட்டு விருந்தைப்போ லின்பந்தரும். அவற்றின் காலத்தில் உண்ணற்கு வேண்டிய நல்ல பதார்த்தங்கள் ஒத்துநோக்குமிடத்துச் சிறுவிலையனவாம்; அவற்றின் காலமில்லாவிடிற் சுவையற்றுள்ள இழிபொருளும் விலையுயர்வால் ஒரு விருந்தைப்போலும் நன்குயிருக்கின்றது.

அது நூல் விஷயத்திலா? மெய்யாகவே தான் படிக்கக்கூடிய நூல்களை விலைக்குப்பெற முடியாதவன் வறியோனே. சமயநூல், நாடகம், காப்பியம் முதலாய மிகவும் நல்ல நூல்கள் இப்பொழுதைப் பழமொழியின்படி ஒருபாட்டுப்பாடி வாங்கப்படலாம். பணத்திற்குச் சௌக்கிய மாதல் புத்தியாதல் நேசமாதல் அழகாதல் இன்பகரமான வீடாதல் வாங்கலாமா?

'டியூக் ஆப்ட்ஸி' என்பவர் மிக்கபணக்காரர். அவரைஎவரும் நேசஞ்செய்யவில்லை. பீகீ என்பவர் பசியாற் செத்தார். அவரை நினைத்து ஜனங்கள் இப்பொழுது விசனப்படுகின்றார்கள்' என்று கன்பியூஷியஸ் கூறுகின்றார்.

"எவற்றினும் மேலாய் இரும்பொருளின்பம்
பயக்குமோ? சுற்றிலும் பாராய்! என்ன
இனியதுன் பங்கள் எழிலார் துக்கம்!
உவற்றின் காட்சி கண்டொன்றும் விரும்பிலேன்
உவற்றின் துன்பு கண்டொன்றும் விரும்பிலேன்"

"அதிகசெல்வவான்கள் தமக்கே அந்நியர். தொழிலின் மலைவிருக்கையில் தம்மன சரீர சௌக்கியங்களைக் கவனிக்க நேர முடையாரல்லர்" என்று பேகனர் கூறுகின்றார்.

பொன் விலங்கா யிருந்தாலு மது தீயதே. உண்மையாகவே பணம் மிக்க மனக்கவற்சியினூற்றுகின்றது. அதற்குங் கவலைகளுள. வறுமைக்குங் கவலைகளுள. பணவிஷயத்திற் செல்வவான் கள் பணத்தின் எசமானரல்லர், அதன் அடிமைகளே. **பிஷப் வில்ஸன்** கூறியபடி பணம் பெரும்பாலும் அதனையுடையார்க்குக் கவலையாகின்றதேயன்றி வதைக்குங் கருவியாகவு முளது. மெய்யாகவே பலர் பணத்தா லழிவுற்றுளர் பொதுப்பட ஒவைத்து நோக்குமிடத்துச் செல்வர் ஏழைகளினும் பணவிஷயங்களைப்பற்றி யதிகமாய்க் கவலைப்படுகின்றார்கள். ஞானவான்களைத் தவிர மற்றெவர்க்கும் பணம் இன்பந்தராது. செல்வமுடையோனுதற்கு அதிக ஆசைப்படுவோன் என்றும் ஏழையாயிருப்பான்.

" வாரிக் கோட்டையில் இருந்து ஒன்றையும் பார்த்து இறும்பூதடையாதிருத்தலினும் ஒரு சிறு வீட்டிலிருந்து வாரிக்கோட்டையைப் பார்த்து இறும்பூ தெய்துதலே நன்று" என **ரஸ்கின் துரை** கூறுகின்றார்.

பணத்தினின்பத்தை நுகரவேண்டு மாகில் அதன்கண் மனம் வையாதீர்! போதிய வளவிருந்தா லஃதும்மைக் காப்பாற்றும். அதிகமாக இருந்தால் அதனை நீர் காப்பாற்றவேணடும்.

ஒட்டை யுறுகிலேன் உறுசுமை நீங்கினேன்
குடிகட் கரசலேன் கோன்சொ லஞ்சிலேன்
கருதேன் வழிநாள் கழிந்ததற் கிரங்கேன்.
போரொன்று மின்றி யானின்று சாந்தமாய்
இயங்கா நின்றேன் இனிமை யாகவே.

விரும்புதற்குச் சிலவும் அஞ்சுதற்குப் பலவும் உடைய மனத்தின் நிலைமை விசனகர மானதே.

செல்வனே யானுல் வறியனும் நீதான்
மிக்க சுமையினுல் மேற்புறம் வளைந்த
கழுதை போலக் கடுஞ்சுமைச் செல்வப்
பொறையைச் சுமந்து போவாய் நீயும்
சாவே நின்றன் றனிச்சுமை களையும்.
பின்னுள் வேண்டிப் பெரும்பொருள் சேர்க்க
மிகக்கவல் கொண்டு வீணுப்ப் பெறற்கரும்
நந்தம் வாணுள் நாம்போக் குதலெனே?
நோய்காண் போழ்தினும் நுகர்போ கத்தினும்
களிசெய வல்லவோ கழறுமின் னிவைகாண்,
ஒருமூச் சதிகமாய் உதவிட வாதல்

சாம்பொழு துறுதுயர் தணிப்ப வாதல்
வல்லன வாங்கொலோ வாய்திறந் துரைமின்.

பணம் காசழுத்தத்திற் கிழுக்கின்றது.

நிலத்தையும் பொன்னையும் நினைக்கின் றேனலேன்
ஊங்குமீங்கும் ஓர் ஒற்றியெற் கீமினோ
எய்ப்பினில் வைப்புச் சாலையி லாயினும்
பிறர்கைம் முறியி லாயினும் அன்றி
அயரதச் சாலையி லாயினும் எனக்குத்
தனித்தொரு பங்கு கிடைப்பினும் போதும்
என்செல விற்குமேற் சிறிதள வாயினும்
அதிர்ஷ்ட மளிக்குமா றவாவு கின்றனென்''

என்று **ஆலிவர் வெண்டல் ஹோம்ஸ்** வேடிக்கையாய்க் கூறுகின்றார்.

“ஏழை பலவற்றை விரும்புகின்றான்; ஆனாற்பொருளாசை பிடித்தோன் எல்லாவற்றையும் விரும்புகின்றான்'' என்று **செனிகா** கூறுகின்றார்.

இரண்டு காசுக்கும் எண்ணெய்க்கும் இல்லாவிடிற் கைம்மாறு கருதாக் கருணையாளர்கள் இன்னும் அதிகமா யிருப்பார் என்று பரிகாசமாய்க் கூறப்பட்டுளது. ‘இடைவிடாது பணந்தேடல், இன்னும் மேன்மையான காரியங்களுடையோரது காலத்தில் அதிக பாகத்தைக் கழியுமாறு செய்கின்றது’ என்று **பேகனர்** கூறினர். ஏனெனிற் செல்வம் வாழ்க்கையையதிகரிப்பதனான் மட்டும் நல்லதே யன்றி வாழ்க்கைச்செல்வத்தையதிகரிப்பதனால் நன்மையில்லை. வறுமை வித்தியார்த்தியின் மனைவியாகக் கூறப்பட்டுளது. நம்பொருள்பற்றிய மொழிகளே பொருளுள்ளன. நாமடிக்கடி ஒருவன் பணம் செய்வதாகவும் பணத்தாற் செய்யப்பட்டதாகவும் பணத்திற் சுற்றுவதாகவும் கேட்கின்றேமே யன்றிப் பணவின்பத்தை நுகருவதாகக் கேட்கின்றிலேம். மெய்யாகவே பணம் சம்பாதிப்போர் தமக்காகச் சம்பாதிக்கின்றாரல்லர். “அவன் பணத்தைக் குவிக்கின்றானே யன்றி யாரதை யெடுத்துக் கொள்ளுவாரென்று சொல்ல முடியாது.”

**சேனபனது** விருந்திற் **சார்மிடீஸ்** என்பவன் செல்வத்தினும் வறுமை சிறந்ததெனச் சொன்னான். “ஏனெனிற் சௌக்கியமா யிருக்கின்றோமென்றுணர்தல் பயத்திலிருப்பதனினும் நல்லதென்றும் தன் றேயத்தாரால் அவநம்பிக்கைகொள்ளப் படுவதனினும் நம்பிக்கைகொள்ளப்படுவது நல்லதென்றும் நாமனைவரும் ஒத்துக்கொள்ளுகின்றோம். ஆனால் இந்நகரில் யான் செல்வனாயிருக்கையில் முதலில் எவனேனுமொருவன் என் இல்லத்துள் வலியொடுபுக்கு என்பணத்தைக் கவர்ந்தும் எனக்கும் சரீரக்கேடுசெய்வானோவென்றி யான் பயந்தேன்......இப்பொழுதி யான் கண்வளர்வான் படுத்துக்கொள்ளலாம். என்னைக் கோயிலிற் பூசை செய்யக் கூப்பிடுகின்றிலர்.

துரைத்தனத்தார் ஐயப்படுமளவு செல்வனல்லேன். நகரத்தை யென்னிஷ்டப்படி விட்டேகுதற்கும் அதன்கண்ணே யிருத்தற்கும் சுவாதீனமாயிருக்கின்றேன். யான் செல்வவானு யிருந்துழி ஜனங்கள் சாக்ரடீஸ் முதலாய இழிந்த தத்துவ சாஸ்திரிகளுடன் சேர்வதற்காக வைவது வழக்கம். இப்பொழு தென்னேசரை யான் தேர்ந்துகொள்ளலாம். ஏனெனில் யான் ஏழையாயினதனால் எவரும் என்னிடம் கவனம்வையார். யான் அதிக பணமுடையோனுயிருந்துழி எப்பொழுதுந் துன்பகரமா யிருந்தேன். நான் எப்பொழுதும் ஏதேனுமொன்றை யிழந்துகொண்டிருந்தேனுதலின் இப்பொழுது நான் வறியோனுயினதனால் ஒன்றும் இழக்கின்றிலேன்; ஏனெனிலிழத்தற்கென்னிடம் ஒன்றும் இலது. ஆயினும் யான் எப்பொழுதும் ஏதேனுமொன்றை யடைவேனென்று ஆற்றித் தேற்றுகின்றேன்.''

சார்மிடீஸ் கூறியதில் மிக்க உண்மையுளது. ஆனலது முழு உண்மையுமன்று. மேலுஞ் சார்மிடீஸ் அதைக்கூறிய பொழுது இசையினல் உற்சாகப்படுத்தப்பட்ட ஒரு நல்ல விருந்து சாப்பிட்டு மயக்குண்டிருந்தான்.

புத்தியுடன் பயன்படுத்தினுற் பணம் அதிகமாகச் செய்யக்கூடும். ஒரு சாதுரியப் பேச்சுள்ள பிரென்சுக்காரன் பணம் இராஜாதிராஜன் என்று சொன்னுன். பணம் நாம் விரும்புவதை யடையும் வழிகாட்டுகின்றது. புதியகாற்று, நல்லவீடு, நூல்கள், இசை முதலானவை நுகரப்படக்கூடுமாகிற் பணம் அவையிற்றை வாங்கும். சாவகாசம் நற்பயன் விளைக்குமேற் பணம் நாமதை மேற்கொள்ளுமாறு செய்கின்றது. உலகம் சந்தோஷகரமானதென்று பார்த்தால் நம்பிரயாணங்கட் கது காசுகொடுக்கும். 'நந்நேசர்க்கு உதவி புரிதலும் துன்புற்றவரை யதினீக்கலும் கூடுமாகிற் பணம் நமக்குப் பெரும்பேற்றை யளிக்கின்றது. அற்றேலதை நீ இருதயத்தில் வையாது நினைவின்கண் வைத்துக்கொள்வீர்' என்று ஸ்விப்ட கூறினர். பணத்தை யதற்காகவே விரும்புவோனும் மட்டாய்ச் செலவிடுதலை யதிகமா யனுசரிப்போனும் கேவலம் ஒரு பொருளாசைபெற்ற இயந்தரமாயிருப்போனுமே தரித்திரர். இழிந்த சிறு கவலைகளினீங்குதல் வாழ்நாட்களுட் கற்கவேண்டிய விடயங்களுளொன்று. பொருளாசை மிகவும் இழிந்தனவற்றுள் ஒன்று. பொருளதிகமாய் ஈட்டினும் கண்டபடி செலவழிப்போனுமுளன். அளவுக்கு மிஞ்சி யிறுகப்பிடிப்பவனுமுளன். ஆதலினது வறுமைக்கே யிடனுகின்றது. எட்வேர்ட் கோர்டினேயின் பேரில் உள்ள உலகறிந்த சரமகவியில்பின் வருமாறு கூறுகின்றது.

'நாஅம் கொடுத்தது நம்மிடத் துளது
நாஅம் அழித்தது நம்மிடத் திருந்தது
நாஅம் மிகுத்தது நம்மிடத் திலது.'

அதே கருத்தடங்கிய பிறிதொரு பாடங்கூறுமாறு:—

யானென் மிகுத்ததை யிழந்துவிட் டேனால்
யானென் அழித்த தென்னிடத் திருந்தது
யானென் கொடுத்த தென்னிடத் துளது.

"வைத்ததனை வைப்பென் றுணரற்க தாமதனைத்
துய்த்து வழங்கி யிருபாலு—மத்தகத்
தக்குழி நோக்கி யறஞ்செய்யி னஃதன்றே
வெய்ப்பினில் வைப்பென் பது".

என்றார் **பழமொழிக்கண் மூன்றுறையரையனாரும்.** மிக்க செலவுள்ளோரா யிராவிடினும் தாராளமாயிருமின். தம்மைச் செல்வராக்கிக் கொண்டாலும் ஏழைகளா யிருப்போரும் தம்மை ஏழைகளாக்கிக்கொண்டாலும் செல்வராயிருப்போருமுளர். ஏழைகளின்மீது தயையுள்ளோர் இறைவர்க்கே கடன் கொடுப்பார். அவர்க்கிவர் கொடுத்ததை யிவர்க் கவர்திருப்பிக் கொடுப்பார். செல்வனாகிய இளைஞற்கு வள்ளலார் கொடுத்த புத்திமதி தனித்தனி மனிதர்க்கும் பொருந்துவதாக எண்ணப்படும்; ஏனெனில் நாம் நம் குழந்தைகளையும் ஏழைகளையும் மனத்தில் வைத்துக் கொள்ளல்வேண்டும். உம் வருவாய் உமதேயாகில் உம்முன்னோரிடமிருந்து நீர் பிதிரார்ஜிதமாகப்பெற்றது உமது மட்டுமன்று. பணக்காரர்கட்குக் சேவர்களைப்போல்வர். நாம் நம்பணத்திற்குக் கணக்குச் சொல்லவேண்டும் அது நம்மிடம் ஒப்புவிக்கப்பட்டுள்ள ஒரு சாமான் பணம் நாம் கருவமுற்றிருக்கும்படியானதொன்றுமில்லை. "இவ்வுலகிற் பணக்காரரைக் 'கர்வமுற்றிருக்தல்' வேண்டாமென்றும் நாம் நுகரபொருள்க ளெல்லாவற்றையு மேராளமாகக் கொடுக்கும் தியந்தமற்றக் கடவுளைத் தவிர நிச்சயமற்றசெல்வத்தை நம்பக்கூடாது."

"நன்மை செய்யவேண்டுமென்றும் நற்றொழிலி லதிகமாய்க் கவனஞ் செலுத்தவேண்டுமென்றும் கொடுக்கச் சித்தமாகவும் அறிவிக்க இஷ்டராகவும் இருத்தல் வேண்டுமென்றும், அந்தமற்ற வாழ்க்கையைக் கைப்பிடிக்கும்படி வரவேண்டிய காலத்துக்குத் தமக்கே சேர்த்துவைக்கவேண்டுமென்றுங் கட்டளையிடுமின்."

சமயநூல் தீங்கனைத்தினுக்கும் மூலகாரணம் பொருளாசையென்று கூறுகின்றதே யன்றிப் பொருளென்று கூறுகின்றிலது. "பணம் அதிமானால் அதன்மேற் கவலைவைக்கவேண்டாம்" ஏசு மலையிலிருந்து கூறிய உபதேசத்திலும் அதே காரணங் கூறப்பட்டுளது. "பாச்சையும் துருவும் அழுக்கும் கள்வர் உடைத்துத்திருடுவனவுமான பொருளுடைய இவ்வுலகில் உமக்குப் பணம் சேர்த்து வையாதீர்." "ஆனாற் பாச்சையும் துருவும் அழுக்காகாததும் கள்வர் திருடாததுமான விண்ணுலகில் உமக்காகச் சேமத

ணம் சேர்த்து வைத்துக்கொண்மின். ஏனெனில் உம் பொருளிருக்குமிடத்தே உம்மனமும் செல்லும்."

பணவிஷயம் முற்றிற்று.

சருக்கை - வரதாசாரியன்.

---

## ருக்மணி சரித்திரம்.

---

### அத்தியாயம் - 6

கடன்வாங்கின இரண்டாயிர ரூபாயில் முப்பதுரூபாய்தான் பாக்கியிருந்தது. சுப்பையர் வியாபாரங்கள் முடியும்முன்னமே இருட்டி விட்டது. செட்டி தன்னை இலகுவாய் விட்டுவிட்டால், பிள்ளையாருக்குத் தேங்காய் உடைப்பதாக வேண்டிக்கொண்டிருந்தார். அந்தப்பிரகாரமே தேங்காய் உடைத்தார். கும்பேசுவரன் கோயிலுக்குப்போயிருந்தார். ஸ்வாமி, அம்மன், இரண்டுசந்நிதியிலும் அருச்சனைசெய்துவைத்தார். எல்லாமுடிந்தன. இராத்திரி $10\frac{1}{2}$ மணி வண்டியிற் புறப்பட்டுச் சீர்காழிக்குப் போவதாக ஏற்பாடு செய்திருந்தார். கோயிலைவிட்டு வெளியே போகும்போது துவஜஸ்தம்பத்தண்டை ஒருவர் வந்து சுப்பையரை நோக்கி

" தாங்களிருப்பது எந்தூர்?" என்றார்.

" ஏன்?"

" கேழ்க்கிறேன். சொல்லுங்கோளேன்."

" சீயாழி."

" இன்னம் எத்தனெநாள் இங்கே?"

" இதோ ஊருக்குத்தான் போறோம்."

" எத்தெனெ நாளாச்சு இங்கேவந்து?"

" காலம் பறத்தான வந்தோம்."

" இவ்வளவு சுருக்காகப் போவானேன்"

" நீங்களார்? தெரியலியே!"

" இந்தஊர்தான் காமாட்சி ஜோஸ்யர் செரு"

" அப்படியா இந்த ஊர்லே நல்ல பிள்ளைகளா ஆப்டுமோ"

" எவ்வளவு வேணும் நான் பிடிச்சுத்தரேன்."

" இப்ப ஊருக்குப் போகணமே என்ன பண்றது!"

" நாளைக்குப் போகலாம்னு அதுகுள்ளே, ஒண்ணு ஏற்பாடு பண்ணித்தரேன்."

" நிச்சயமா?"

" நிச்சியமா."

"ஏண்டா அம்மாஞ்சி, இன்னிக்கும் நாளைக்கும் இருந்து பார்ப்பமா?" அம்மாஞ்சியு மொத்துக் கொண்டார்.

"எந்த மாதிரிப்பையன் வேணும் நல்ல பணக்காரப் பையன்களு மிருக்கா. நல்ல படிச்ச பையன்களு மிருக்கா. இது கொஞ்சம் அது கொஞ் மாவும் ஆப்டும். எப்படி வேணும் சொல்லுங்கோ?" என்று அவர் கேட்டார்.

"ரெண்டுங் கலந்தாப் லேர்ந்தாத்தான் தேவலே."

"அப்படி, சுப்பராமன் பிள்ளை ஒண்ணு ராமஸ்வாமி அய்யர் பிள்ளை ஒண்ணு. பந்த நல்லூர் மைனர் ஒண்ணு. நல்ல இடமா மூணு இடம் இருக் கும்."

"எங்கே, எங்கே, மைனர் ஆரு."

"டபீர் தெருலே இருக்கான்னே பையன் கண்ணுக்கு நன்னாருப்பன். வயது பதினாறுதான் ஆச்சு. மாமாதான் ஸ்டேட்டைப்பாத்துகரார் அம்மா இருக்கா வேறே பிக்கில்லே பிடுங்கலில்லே. நல்ல வரந்தான்."

"எவ்வளவு ஆஸ்தியோ?"

"அஸல் க்ராமம் ஒண்ணிருக்கு."

"எவ்வளவு பொரும்?"

"எழுபத்தையாயிரம் குருடன் குடுப்பன்."

"அப்படியா அதை எசைச்சு விடுங்களேன்."

"அதுக்கு என்னன்ணு மாமாவைப் பிடிக்கணம்."

அவனைப் பிடிச்சுட்டுமோ நம்மகாரியம் ஆய்டுத்து.

"எல்லாம் நீங்கதான்."

"பணம் ரொம்ப ஆகுமே."

"எவ்வளவு ஆகும்."

"இரண்டாயிரத்துக்குக்கொறையு வன்னு தோணலே"

"அடேயப்பா."

"என்ன அப்படிச் சொல்றகளே பறதைப் பசங்களெல்லாம் அந்நூறு ஆயிரம் கேழ்கச்சே மகாராஜன் அவன் கேக்கறத்துக்கு என்னதடை? அது வும் ரொக்கங்குடுக்காலம்.

"பாத்துக்குவோம் நாளைக்கு பேசாம அதைப்பத்தி"

"சரி" என்று சொல்லி அப்பிராமணன் படுக்கைக்கு அவ்விருவரை யும் தனது கிருகத்துக்கு அழைத்துக்கொண்டு போய்ச்சேர்ந்தார்.

கு. ரா. ஸ்ரீநிவாச ஐயங்கார்,

# புத்தகக் குறிப்புகள்.

**வியாசமஞ்சரி** :—இப்புத்தகத்தின் பெயரினாலேயே இதிலடங்கியவை யின்னவென ஒருவாறு தெரிய வரும். இதில் "ஊன்றிப்பார்த்தல்" முதலாக "ஆங்கிலவரசாட்சி" யிறுதியா 52 - விஷயங்கள் இனிய, எளிய, தெளிவான நடையில் எழுதப்பட்டுள. இது 103 - பக்கங்களுடையது. சென்னை இராசதானியிலுள்ள பாடசாலைகளில் **லோயர் செகெண்டரி மெட்டிரிகுலேஷன்** என்னும் பரீட்சைகளுக்கு வாசிக்குமாணவர்களுக்கு இது மிகவும் உபயோகப்படக் கூடியது. சென்ற பல்லாண்டுகளாகச் சென்னைச் சர்வகலாசங்கத்துத் தமிழ்ப் பரீட்சைஷக் கர்த்தர்களில் முக்கியமானவரான ம-ா-ா-ஸ்ரீ தண்டலம் பாலசுந்தர முதலியாரவர்கள் இதற்கு எழுதிய முக வுரையினாலேயே இப்புத்தகம் மாணாக்கர்களுக்கு ஒரு வழிகாட்டியாக இருத்தல் வேண்டுமென்பது பெறப்படும். இதன் விலை : 4 அணா.

**போஜ சரித்திரம்**:—ஆங்கில ஆரிய மொழிகளிற் றேர்ச்சியெய்தியோ ருட் சிலர் பிறபாஷை நூல்களை நன்கு கற்று நாடக விலக்கணத்தை நன்குணர்ந்து அவ்வுணர்ச்சி துணைக்கொண்டு தமிழ் மொழியுள்ளும் நாடகங்களியற்றத்தலைப்பட்டனர். அவற்றுள்ஒன்று தற்காலத்துத் தோன்றி நிலவுதலுறும் **போஜசரித்திரம்** என்னுந் தமிழ் நாடகம்.

போஜ ராஜனுடைய சரித்திரத்தி னொரு பகுதியைக் கூறுதலாற் போ ஜசரித்திரம் எனப்பெயர்பெற்ற இந்நாடகம் வடமொழியிலுள்ள பிரபல ஆதாரகிரந்தங்களைத் தழுவி இயற்றப்பட்டுள்ளது. இந்நூலால் நமது பர தகண்டம் பலநூற்றாண்டுகளுக்கு முன்னர் எந்நிலைமையிலிருந்த தென அறி தல்கூடும். நூலுட் கூறப்படுங்கதை எளிதிற் கிரகிக்கப்படுந் தன்மையதாயும் இடையறாது இன்பந்தருவதாயு நிற்றலின் இது நாடகமோவெனச்சிலர் ஐயு றவும் சிலர் இது நாடகமன்று கதைப்புத்தகமே யெனத்துணியவும் புகுதல் அசம்பாவிதமன்று. ஆனால் அத்தன்மையால் நாடக லக்ஷணக் குறைவு பாடுண்டோ வென்னிற் சிறிது மில்லையெனவே சொல்லவேண்டியிருக்கி கின்றது. யுக்தியாற் சங்கதிகளை யறியவைக்கும் சம்பிரதாயங்கள் வேண் டிய அளவிற் பிரயோகிக்கப்பட்டிருக்கின்றன. நூலமைந்த நடையோ எளிய தமிழ் நடை. இந்நூலாசிரியர் வடமொழிப்பதங்களும் விரவி வருவதனால் தமிழ் நடைக்கு ஒரு கம்பீரமும் ஏற்றமும் அழகும் உண்டா மென்னுந் தமது துணிவைத்தழுவி அநேக சமஸ்கிருதபதங்களை வழங்கி யிருக்கின்றனர். இந்நூலுட்காணப்படும் செய்யுள்களிற் பல நூலாசிரியர் இயற்றினவேயாயினும் கம்பராமாயணம், பிள்ளையார் புராணம், அரிச்சந்திர புராணம், நைடதம், தாயுமானவர் பாடல், இராமலிங்கப்பிள்ளை அருட்பா முதலியவற்றினின்று மெடுத்த மேற்கோள்களாவனசில. பாடல்களெல்

லாம் பொருளொளிதில் விளங்குவன. நவரஸங்களும் ஆங்காங்கே பொருத்த முறப்பிரயோகிக்கப்பட்டுக் கற்போரை வசீகரிக்கின்றன. இடையர்கள் சம்பாஷணையும், பில்லர்கள் சம்பாஷணையும் அச்சாதியார் சுபாவங்களை நன்கு விளக்குவதோடு குதூகலந்தருவனவா யமைந்திருக்கின்றன. அதி புத்திமானும் அதிமூடனும் அதிபாக்கியவானும் அதிதரித்திரனும் நூலகத் துப்போந்து அவரவர்குணங்களை வெளிப்படுத்து கின்றார்கள். இரண்டு ராத்திரிகளில் அரங்கத்தில் நடித்துக்காட்டத்தக்கது. முதற்கட் பேராசை யாலும் வஞ்சனையாலும் உண்டாகும் தற்காலவெற்றியும் பின்னர்த் தீய ஒழுக்கத்திற்கும் அநீதிக்கும் காலக்கிரமத்தில் தானே யுண்டாகக்கூடிய நாசமும் மிகத்தெளிவாக விளக்கப்பட்டிருக்கின்றன.

---

## சமாசாரக் குறிப்புகள்.

---

**சை. இரத்தின செட்டியார்** :-சென்னை ரிப்பன் பிரஸ் அதிகாரியாயும் இந்து மதத்தில் அதிக பற்றுள்ளவராயும், ஜனோபகாரியாயும், தமிழ்ப் பாஷையிற் பல வேதாந்த நூல்களை அச்சுவாகன மேற்றினவருமான இவர் நாளது மாசம், 8௳ செவ்வாய்க்கிழமை காலஞ்சென்று விட்டனர். தமி ழுலகு இவருக்கு அதிகக்கடமைப் பட்டிருக்கின்றது.

***

**மகாதேவ கோவிந்த ரானடே** :—இந்தியா தேசத்துக் கல்விமான்க ளிலும், தேசாபிமானிகளிலும் தலைநாயகம்போலப்பிரகாசித்தும், ராஜாங்கவி ஷயங்களிலும் ஆசாரச் சீர்திருத்தத்திலும், தொழிலபி விருத்தியிலும், தேச நன்மைக்குரிய எல்லா விஷயங்களிலும் தான் முன்னின்று முடித்தும், ஐரோப்பியர்கள், இந்துக்கள், மகம்மதியர்கள், கிறிஸ்தவர்கள், பார்ஸிகள், இன்னும் மற்றவர்களுடைய நம்பிக்கையையும் பெற்றுப் பம்பாய் ஐகோர்ட் ஜட்ஜிகளில் ஒருவராய் விளங்கியும் இமாலயற் முதல் கன்னியா குமரிவரை யிலும் உள்ள இந்தியர்கள் தம்மைத் தலைவரென மதிக்கப் பெற்று மிருந்த இவர் நாளதுமீ 16௳புதவாரம் இரவு $10\frac{1}{2}$-மணிக்கு மண்ணுட்டை விட்டு விண்ணுட்டை அடைந்தனர். இவரது பிரிவாற்றுமையால் வருந்தாத இந்தி யரு முளரோ !

***

**பஞ்சம்.**—இஃது இந்தியாவை இனி நாடாதபடிக்கும் அப்படி அதுமீறி வந்தாலும் ஜனங்களை வருத்தாது அதனை அடித்துத் துரத்திவிடும்படிக்கான ஏற்பாடு செய்யவேண்டி இந்திய கவர்ன்மெண்டார் ஒரு கமிஷன் இப்போது ஏற்படுத்தியிருக்கிறார்கள்.




விக்டோரியா சக்கிரவர்த்தினியார்.